பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

# வலம்புரி
VALAMPURI

லாலா சோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
குகன்
பல்பொருள் வாணிபம்
பஸ் நிலையம் முன்பாக
யாழ்ப்பாணம்.
லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 14 புதன்கிழமை (29-11-2000) தொ. பேசி 3378 ஒலி: 345

## ★ புலிகளின் நிபந்தனைஅற்ற பேச்சினை அமெரிக்க ராஜாங்கசெயலர் பாராட்டி வரவேற்றுள்ளார்!

### சமாதான தீர்வு கனிந்துள்ளது

(கொழும்பு விஷேட நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மாவீரர் தின உரையின் போது; நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார் எனக் கூறியிருப்பது சமாதானத் தீர்வு தொடர்பான தைரியத்தை ஏற்படுத்தியிருப்பதுடன் அது வரவேற்கத்தக்கதுமான ஒரு செயல் என்றும்;

விடுதலைப் புலிகள் அமைதியான முறையில் தமது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ள முயல வேண்டும் என்றும்; அமெரிக்க இராஜாங்க அமைச்சின் செயலாளர் கார்ல்இண்டப்பேர்த் சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றுக்களித்த பேட்டியின் போது தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சின் செயலர் கார்ல் இன்டர் பேர்க் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்திருப்பதாவது,

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று கூறியிருப்பது தொடர்பான முழுமையான தகவல்கள் எமக்கு இதுவரை கிடைக்கவில்லை. செய்தி ஊடகங்கள் மூலமாகக் கிடைத்த தகவல்

(8ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் இருவர் பலி

(அநுராதபுரம்)

பதவியா அணைக்கட்டுப் பகுதியில் அமைந்துள இராணுவ காவல் அரண் மீது விடுதலைப்புலிகள மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு படையினர் கொல்லப்பட்டும் இரண்டு படையினர் காயமடைந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதல் நேற்று காலை 6.15 மணிக்கு இடம்பெற்றது (ம)

## லங்காமுடித பயணசேவை நேற்று இடம்பெறவில்லை

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ்ப்பாணத்திலிதிலிருந்து திருமலைக்குப் ,பயணிகளை ஏற்றிச்செல்வதாக இருந்த லங்கா முடித கப்பலின் பயணசேவை திடீரென நிறுத்தப்பட்டதால் பயணிகள் ஏமாற்றமடைந்தனர்,

லங்கா முடித கப்பல்சேவை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ந-12)

## பிரபாகரனின் அறிவிப்பை வரவேற்கிறோம்!

### ரணில்கருத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 11 வது மாவீரர் தின உரையின் போது, நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாக வெளியிட்ட கருத்து வரவேற்கக்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அநுராதபுரத்தில் குண்டு வெடிப்பு பயணிகள் 7பேர் பலி:40பேர்காயம்

### பஸ் வண்டி பலத்த சேதம்

(அநுராதபுரம்)

அநுராதபுரம் பகுதியில் குண்டொன்று வெடித்ததில் பஸ்ஸில் பிரயாணம் செய்த 7 பேர் கொல்லப்பட்டும், 40 பேர் காயமடைந்துமுள்ளனர்.

காயமடைந்தவர்கள் அநுராதபுரம்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆபத்தான நிலையில் உள்ள ஒருவர் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

கடந்த 13ம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட தவறுதலானவெடி விபத்தில்

- 2ம் லெப் சாந்தகுமாரி/ சாரதா (கோபாலபிள்ளைகோமளா) மட்டக்களப்பு
- தர்சிகா (சண்முகம் சுகிர்தமாதா) மட்டக்களப்பு
- 2ம் லெப். கைதேகி (குணசேகரம் செல்வித்தாத்தா)

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவின் உரைக்கு தமிழ் கட்சிகள் வரவேற்பு

சர்வதேச சமூகம் உன்

தமிழர் விடுதலைக்கூட்ட

## யாழ்தொழிநுட்பக்கல்லூரிமாணவன்கைது
## எம்.பியின் நடவடிக்கைக்காக

## தமிழ் கட்சிகள் வரவேற்பு

சர்வதேச சமூகம் உன்னிப்பாகவும், ஆர்வத்துடனும், எதிர்பார்த்திருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தினஉரையை தமிழ்க் கட்சிகள் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளன.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும் யாழ்.மாவட்ட எம்.பியுமான வீ. ஆனந்தசங்கரி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவரும், யாழ். மாவட்ட எம்.பியுமான அ.

→ 8ஆம் பக்கம் பார்க்க

## எம்.பியின் நடவடிக்கைக்காக போராட்டம் மட்டுப்படுத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் ஸ்ரீரங்கநாதன் கைது செய்யப்பட்டமையை கண்டித்தும்அவரது விடுதலை தொடர்பாகவும் மேற்கொள்ளப்படும் மாணவர் போராட்டம் மட்டுப்படுத்தப்பட்டளவில் நடைபெறுமெனவும் கல்லூரி மாணவர் சங்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது...

மேற்படி மாணவனின் கைது தொடர்பாக ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.வி. குகேந்திரன் (ஜெகன்) அவர்களோடு தொடர்புகொண்டு விடுதலை தொடர்பாக கோரிக்கை விடுக்கப்பட்டது. ஐந்து நாட்களுக்குள் மாணவனை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்துள்ளார்.

அதன்காரணமாக மாணவன் விடுதலை செய்யப்படும் வரை மட்டுப்படுத்தப்பட்டளவில்தொடர்ந்தும்போராட்டம் நடைபெறுமென்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

### கடந்த 18 ஆண்டுகால மண்மீட்புப் போரில்

# விடுதலைப் புலிகள் தரப்பில் 16599பேர் வீரச்சாவைத் தழுவினர்

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் விடுதலைப் போராட்டத்தில் இற்றைவரை 16 ஆயிரத்து 599 பேர் வீரச் சாவடைந்துள்ளதாக விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வ அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

முதல் மாவீரர் வீரச்சாவடைந்த 27-11-1982 முதல்

→ 8ஆம் பக்கம் பார்க்க

### 1983 முதல் ஒக்ரோபர் 2000வரை

# 12,019 படையினர் பலியாகினர் இராணுவப் பேச்சாளர் அறிவிப்பு!

(கொழும்பு)

1983 ஜனவரி முதல் இவ் வருடம் ஒக்ரோபர் மாதம் வரை பதினோராயிரத்து473 இராணுவமும், 327 கடற் படையினரும், 219 விமானப் படைனருமாக மொத்தம் பன்னீராயிரத்து 19 பேர் முப் படையினரில் உயிரிழந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் சனத்கருணாரட்ன தெரிவித்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்

(பண்டாரவளை)

மத்திய மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் உள்ள விஞ்ஞான, கணித பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு வடக்குக் கிழக்கு மாகாணத்தில் வேலையற்றிருக்கும், விஞ்ஞான, கணித பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம் என்று மத்திய மாகாண தமிழ் கல்வி இந்து கலாச்சார சமூக சேவைகள் அமைச்சர் ராதாகிருஷ்ணன்வலம்புரிக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தார்.

இவ் ஆசிரியர் வெற்றிடங்கள் சம்பந்தமாக அவர் தகவல் தருகையில்;

மத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் நில

(8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### மலிவு விலை

பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள், இலங்கை, இந்திய எழுத்தாளர்களின் நாவல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் அனைத்தும் மலிவாக எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். இன்றே விஜயம் செய்யுங்கள். ஸ்ரீ சக்தி புத்தகசாலை சிவகாம சுந்தரி அம்மன் ஆலயத்துக்கு அருகாமை ஆடிய பாதம் வீதி திருநெல்வேலி. (கி–1056)


# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

நவம்பர் மாதம் 28ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 150629 ஏ | 155265 ஏ |
| 155265 பி | 155265 சி |
| 155265 டி | 161729 ஏ |
| 161729 பி | 161878 ஏ |
| 166556 ஏ | 166576 ஏ |
| 166686 ஏ | 166689 ஏ |

| | |
|---|---|
| 168990 ஏ | 168991 ஏ |
| 168991 பி | 169026 ஏ |
| 169026 பி | 169026 சி |
| 169026 டி | 169026 ஈ |
| 169'41 ஏ | 169141 பி |
| 169157 ஏ | 169157 பி |
| 169163 ஏ | 169197 ஏ |
| | 169197 பி |
| 169197 சி | 169197 டி |
| 169287 ஏ | 169287 பி |
| 170052 ஏ | 170052 பி |
| 170155 ஏ | 170205 ஏ |
| 170256 ஏ | 170404 ஏ |
| 170256 ஏ | 170420 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 160803 ஏ | 164156 ஏ |
| 164156 பி | 164156 சி |
| 164156 டி | 164156 ஈ |
| 169174 ஏ | 169174 பி |
| | 169183 ஏ |
| 169183 பி | 169183 சி |
| 169183 டி | 169183 ஈ |
| 169321 ஏ | 169425 ஏ |
| 169425 பி | 169983 ஏ |
| 169988 ஏ | 169988 பி |
| 170048 ஏ | 170089 ஏ |
| 170157 ஏ | 170307 ஏ |
| 170333 ஏ | 170345 ஏ |
| 170345 பி | 170389 ஏ |
| 170389 பி | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 160927 ஏ | 161710 ஏ |
| 161867 ஏ | 161867 பி |
| 161916 ஏ | 191916 பி |
| | 166542 ஏ |
| 166542 பி | 166672 ஏ |
| | 166672 சி |
| 166672 சி | 168942 ஏ |
| 168943 ஏ | 168998 ஏ |
| 168998 பி | 169081 ஏ |
| 169081 பி | 169196 ஏ |
| 169259 ஏ | 169259 பி |
| 169259 சி | 169259 டி |
| 169277 ஏ | 169277 பி |
| 169949 ஏ | 169949 பி |
| 169963 ஏ | 169966 ஏ |
| 169966 பி | 169974 ஏ |
| 170002 ஏ | 170012 ஏ |

## நவில்கின்றோம் நன்றிகள் பல

23.11.2000 அன்று அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

### திரு. அருணாசலம் ஆறுமுகம்

[சமாதான நீதவான் இளைப்பாறிய உப அதிபர்]

அவர்களது அந்திமக் கிரியைகளிற் கலந்துகொண்டு எங்கள் துயரிற் பங்குகொண்ட அனைவருக்கும் தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து குடாநாட்டின் பல்வேறுஇடங்களிலும் வசித்தும் துயரச்செய்தி கேட்டதும் ஓடோடி வந்து பங்கு கொண்டோருக்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி உப அதிபர் ஆசிரியர்கள், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், யா/கப்புது ஏகாம்பர வித்தியாலய ஆசிரியர்கள் மாணவர்கள் யாழ்ப்பாணம்,பளை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மாகாணப் பணிப்பாளர் அலுவலகப் பொறியியலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் சாவகச்சேரி ப.நோ கூ. சங்கத்தலைவர், உத்தியோகத்தர், ஊழியர்கள் தென்மராட்சி வர்த்தக சங்கத்தினர்கள், இலங்கை வங்கி முகாமையாளர்கள், உத்தியோகத்தர் ஊழியர்கள் யாழ். பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள், யாழ். மின்னகம் யாழ். மகாநதி, சங்கமம் என்பவற்றின் உரிமையாளர்கள், ஊழியர்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் தலைமையில் அஞ்சலி உரை நடத்தியோர் துண்டுப் பிரசுரம், பத்திரிகை தபால் மூலம் அஞ்சலி செலுத்தியோர் பல்வேறு நாடுகளிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியோர் மலர் வளையங்கள் சாத்தி மரியாதை புரிந்தோர், எல்லா வகைகளிலும் பல்வேறு உதவிகள் புரிந்த கப்புது வாழ் பெருமக்கள், கொட்டகைப் பந்தல் அமைத்துதவிய கரணவாய் லிங்கம்ஸ் உரிமையாளர், ஊழியர்கள், விசேடமாக உடன் இத்தகவல்களை பிரசுரித்த ''வலம்புரிப்'' பத்திரிகை நிறுவனத்திற்கும், பிரயாண வசதியற்ற இந்நேரம் தங்கள் அன்பு வாஞ்சையால் திரளாகச் சமுகம் தந்து அஞ்சலி செலுத்திய எல்லோருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம்.

நிரந்தர முகவரி
'ஜெயபதி'
தாமோதரம் வீதி
சாவச்சேரி

இங்ஙனம்
**குடும்பத்தவர்**

தற்காலிக முகவரி
'ஜெயமலரகம்'
கப்புது
கரவெட்டி

தகவல்
ஆ. ஜெயபாலன் (மகன்)
(சமாதான நீதவான்)

## கொரிய அமைச்சர்கள் சந்திப்பு

(சியோல்)

அமைச்சர் மட்டத்திலான கொரியப் பேச்சுகள் அடுத்த மாதம் பன்னிரண்டாந் திகதி நடை பெற இருக்கிறது

வடகொரியாவிற்கும் தென் கொரியாவிற்கும் இடையே அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சுகள் அடுத்த மாதம் பன்னிரண்டாந்திகதி நடைபெற இருக்கிறது.

# க. பொ. த. [உயர்தரம்] பரீட்சை முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

நடைபெற்று முடிந்த க. பொ. த. (உயர்தரம்)2000ம் பரீட்சை பெறுபேறுகள் சில பாடசாலை ரீதியாக தரப்படுகின்றது.

### மல்லாகம் மகாவித்தியாலயம்

**வர்த்தகம்**
ஆர். மஞ்சுளா 3ஏ, சி
**கலை**
எஸ். செந்தூரன் 2ஏ, பி
ஆர். காண்டீபன் 3பி
எம். சுதாகரன் ஏ, பி, சி

### இராமநாதன் கல்லூரி மருதனார்மடம்

**கலை**
மேரி அருள்மதி 2ஏ, 2பி
கே. எட்வின் 2ஏ, 2பி
**வர்த்தகம்**
வி. மிதிலா 2ஏ, 2பி
வி. பிரியதர்சினி 2ஏ, பி
கே. கோகிலவாணி 2ஏ, 2சி
ரி. சிவரஞ்சினி 2ஏ, 2சி
எஸ். மதிவதனி ஏ, 2சி
**கலை**
ஏ. மேசி ஜெக்குலன் ஏ,2பி,சி
ஆர். தர்மிலா 2ஏ, 2சி
எஸ். சர்மின் ஏ, பி, சி
எஸ். தயாளினி ஏ, பி, சி
கே. சயந்தினி ஏ. பி, சி
ரி. பத்மினி ஏ, பி, சி
வி. தர்சினி ஏ, பி, சி
எஸ். தவரஞ்சினி ஏ, பி, சி

### ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சுன்னாகம்

**வர்த்தகம்**
எல். ரமா ஏ, பி, சி,
ரி. தனுஷா ஏ, பி, சி
கே சசிலேகா 2ஏ, 2பி
பி. பாலச்சந்திரன் ஏ, 3பி
எஸ். கமல்ராஜ் ஏ. 2பி, சி
வை. ஜான்சிசுதர்மதி ஏ, 2பி, சி
ஆர். றொபின் ஜெயரூபன் 4பி
**விஞ்ஞானம்**
எஸ். விந்தியகுமார் 2ஏ, சி
என். ரமேஸ் ஏ, 2பி, சி
**கலை**
எஸ். ரமேஸ்குமார் 2ஏ, பி
எஸ். திருக்குமரன் 2ஏ, பி
ஐ. குவல்றீனா 2ஏ, பி
எல். சியாமளா 2ஏ, பி
ரி) பவித்ரா 2ஏ, சி
எஸ். குணசீலன் ஏ, 2பி
சே. கஜந்தன் ஏ, பி, சி
எஸ். ராதிகா ஏ, பி, சி
வி. சுலிந்தா ஏ, பி, சி
எஸ் விஜயகௌரி ஏ, பி. சி
பி. ஸ்கந்தராஜ் 3பி
எஸ். தர்சினி 3பி
எ. பிரதீபா 2ஏ, 2பி
எம். லதா 2ஏ, 2பி
ஜே. ஜெயராஜ் 2ஏ, 2பி
பி. ஷாமினி ஏ. 3பி
ஆர். நெடுஞ்சேரலாதன்

### யாழ். இந்து மகளிர் கல்லூரி

**கலைப் பிரிவு**
ந.சிவானி 3ஏ
கை.ஹம்சானந்தி 2ஏ,பி
அ.சிவலலிதா 2ஏ,பி
நா.மீனலோஜினி 2ஏ,சி
யோ.பிரசாந்தினி 2ஏ,சி
ந.வசுமதி ஏ,2பி
கெ.ராஜினி ஏ,2பி
அ.மீனலோஜினி ஏ,2பி
ரா.மனஸ்வினி ஏ,பி,சி
அ.பிரதீபா ஏ.பி,சி
தே.இந்துஜா ஏ,பி,சி
மா.தர்மினி ஏ,பி சி
ஸ்ரீ.மயூரதி ஏ,பி,சி

**வர்த்தகம்**
தி.சத்தியவாணி 3ஏ
வே.நிரஞ்சலா 4ஏ
சி.சைலஜா 3ஏ,பி
ந.யோகநிதி ஏ,3பி
பா.கமலவாசுகி ஏ,பி,சி
சீ.பிரபாலினி ஏ,பி,எஸ்
யோ.ரஷ்மி ஏ,2பி
க.ராதிகா ஏ,2சி
சி.சிவப்ரியா ஏ,2சி
சி.சிவதர்ஷினி ஏ,பி,சி
தி.ரேவதி ஏ,பி,சி
சி.சசிலா 2ஏ,பி,சி
பு.அனித்தா 2ஏ,பி சி
க.வானுஜா ஏ,2பி,சி
சி.நிஷாந்தினி 2ஏ,2சி
பே.தேன்மொழி 2ஏ,2சி
வி.சுதர்சினி ஏ,2பி,சி
ச.தயானி ஏ,2பி,சி
நி.மாலதி ஏ,3பி
பே.துர்க்கா ஏ,பி,சி,எஸ்

**விஞ்ஞானம்**
என்.துர்க்காதீவனா 3பி,சி
பி.லலிதாமணி 2பி,2சி
ஏ.தீபதர்ஷினி 2பி,2சி
எஸ்.சுதர்சனா பி,3சி
எஸ்.சிவதீபா பி,2சி

### யாழ். மத்திய கல்லூரி (வர்த்தகம்)

ம. யூட் 3ஏ
தி. தயாபரன் 3ஏ
ம. ஆனந்தபாபு 2ஏ, பி.
பா. பிரதாப் 2ஏ, பி.
ஸ்ரீ. பிரதீபன் 2ஏ, பி.
தி. சுதர்சன் 2ஏ, பி.
S. S. A. R. நிலேஜ்குமார் 3ஏ. பி
ச. செங்கீரன் 2ஏ, 2பி
தி. சிவாகரன் ஏ, 2பி
ம மோகன்ராஜ் ஏ, 2பி
ஸ்ரீ. தனேஸ்காந்தன் ஏ, 2பி
க. ஸ்ரீபரன் ஏ, 3பி
த. விமலாகரன் 3ஏ, சி
ந. ரதிகுமார் ஏ, பி, சி
சு. சுதாகர் ஏ, பி, சி
தி. வாமதேவன் ஏ, பி, சி
ர. ரணேசன் 2ஏ, 2சி
அ. எமில்ராஜா ஏ, 2பி, சி
தி. பிராங்ளின் 3பி, சி
ஜே. கில்ரன் 3பி, சி

### சுண்டுக்குளி மகளிர் பாடசாலை

**கலை**

'ஜெயமலரகம்' ஆ. ஜெயபாலன் (மகன்)
கப்புது (சமாதான நீதவான்)
கரவெட்டி.

(கி-1065)

## பிரிவுத்துயர் பகிர்வு

### ஆறுமுகம் சண்முகநாதன்

(ஓய்வுபெற்ற மக்கள் வங்கி உத்தியோகத்தர்)
அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் சண்முகநாதன் 27 ஆம் திகதி காலமானார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் சென்னையில் நடைபெறும்.

தகவல்: ஆ. தேவராசா (சகோதரன்)

### திருமதி தவமணி கந்தையா

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தவமணி கந்தையா 25. 11. 2000 அன்று கனடாவில் காலமானார்.
இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

தகவல்: நா. இலகுப்பிள்ளை (மைத்துனர்)

### திருமதி கணபதி மாணிக்கம்

வேலணையைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி மாணிக்கம் 27 ஆம் திகதி சிவபதமடைந்தார்.
இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்: குடும்பத்தினர்

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

**வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**
**நாட்டியமாணி செய்முறைப் பரீட்சை (வெளிவாரி) 1998**

மூன்றாம், நான்காம் வருட மாணவர்களுக்கான நாட்டியமாணி செய்முறைப் பரீட்சை கீழ்வரும் திகதிகளில் மருதனார் மடத்திலுள்ள இராமநாதன் நுண்கலைத்துறைப் பிரிவில் நடைபெறும்.

மூன்றாம் வருடம்
04.12.2000 மு.ப 9-30
நாட்டியம்.
05.12.2000 மு.ப 9.30
துணைப்பாடம்.
நான்காம் வருடம்
07.12.2000 மு.ப 9.30
நாட்டியம்
08.12.2000 மு.ப 9.30
அவைக்காற்றுகை

**பதிவாளர்** (கி-1066)

---

ஜே. ஜெயராஜ் 2ஏ, 2பி
பி. ஷாமினி ஏ, 3பி
ஆர். நெடுஞ்சேரலாதன் ஏ, 3பி
ஏ. பஸ்ரியன் ஏ, 2பி, சி

**சுண்டுக்குளி மகளிர் பாடசாலை**
**கலை**
சி. உஷாணி 2ஏ,பி

(7ஆம் பக்கம் பார்க்க)

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 20 - 10 - 1921 |  | 29 - 11 - 1997 |

(அமரர்)
### திருமதி நாகரட்ணம்-சின்னத்தங்கம்

எமது குடும்பத்தின்குலவிளக்காய், பாசத்தின் உறைவிடமாய், இருந்த அம்மாவே நீங்கள் இறைவனடி சேர்ந்துமூன்று ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சில் நிலைத்திருக்கும்

கொல்லங்கலட்டி **நா.சண்முகரட்ணம்** (மகன்)
பிள்ளையார் கோவிலடி, **நா.அன்னமலர்** (மகள்)
தெல்லிப்பழை. **நா.சிவாட்ணம்** (மகன்)
**ச.சுரேஸ்** (பேரன்)

தற்காலிக முகவரி
கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை.

(1067)

## யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட 9கைதிகள் அனுப்பிவைக்கப்படுவர்

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட மூன்று இராணுவத்தினர், ஒருசிறுவன் உட்பட ஒன்பது பேர் லங்கா முடித கப்பல் மூலம் தென் பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

டபிள் யூ ஐ எம்.வெணான், டோ கே. எச். எம். ஐ. பிரசாந்ஞானசிறி,பி.ஏ.பிரியந்த குமார,முத்துலிங்கம் ஜெயராஜ்ரீ.தவரூப்ன்,ஆர்.கமலாகரன், ஜி.சமலதாஸ், ஏ. ஸ்ரவிஸ்லஸ்,எம். நாகேஸ்வரன். ஆகியோர்களே நீதிமன்றங்களின் உத்தரவுகளுக்கமைய மேலதிக விசாரணைகளுக்காகவும் தண்டனைகளுக்காகவும் அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

பிரஸ்தாப மூன்று இராணுவத்தினரும் கிளாலிகொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-12)

### சட்டவிரோத மின் பெறுவோரை

## கண்காணிக்கும் பணியில் கோப்பாய்கிராம அலுவலர்

(கோப்பாய்)

சட்டவிரோத மின்சாரம் பெறுவோரை கண்காணிக்கும் பணியில்கோப்பாய் மத்தி கிராம சேவையாளர் ஜோசப் ரட்ணராஜா முனைப்புடன் ஈடுபட்டு வருகிறார்.

மாலை வேளையில் இடம் பெறும் கிராமசேவையாளரின் இக்கண்காணிப்பு பணியைத் தொடர்ந்து, இப்பகுதியில் சட்டவிரோத மின்சார பாவனையாளர் மிகவும் குறைவடைந்துள்ளனர்.

அத்துடன், முன்னரைவிட தற்போது ஒழுங்கான மின்சாரம் பெற முடிவதாக அப்பகுதி மின்பாவனையாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இதேசமயம், கிராமசேவையாளரின் இச் சமூகப் பணிக்கு பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளதுடன், சமூகத்தின் அனைத்து தரப்பினரும் வரையறுக்கப்பட்ட கடமைகளுடன் நின்றுவிடாது,இவ்வாறு பொதுநலன் பேணும் முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலமே சமுதாயத்தை சீர்ப்படுத்த முடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-57)

### ஸ்ரீலங்கா உப்புக் கூட்டுத்தாபன

## ஊழியர் சம்பள விடயம் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் இல்லை

### ஊழியர் சங்கம் கடும் விசனம்

[யாழ்ப்பாணம்]

ஸ்ரீலங்கா உப்புக் கூட்டுத்தாபன ஊழியரின் நஷ்டஈடு சம்பந்தமாக அல்லது அவர்களது சம்பளவிடயம்தொடர்பாக இது வரையில் உருப்படியான நடவடிக்கை எவராலும் மேற்கொள்ளப்படவில்லை. இது விடயத்தில் மேற்படி நிறுவனகணக்காளர் கடந்த 26ம் திகதி வலம்புரி பத்திரிகைக்கு வழங்கிய செய்தி முற்றிலும் தவறானதாகும்.

வட பிராந்திய உப்பள ஊழியர் சேவை நலச்சங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

மேற்படி சங்கம் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

இச்செய்தி எமது சங்கத்திற்கு வியப்பையும் மனவேதனையினையும் அளிக்கின்றது. இது தொடர்பில் எமது கூட்டுத்தாபன ஊழியர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு முழுநேரமாகச் செயற்படுபவர்கள் என்ற வகையில் எமது சங்கம் உண்மை நிலையினை ஊழியர்கட்கும் ஏனையோர்க்கும் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.

கணக்காளரினால் வெளியிடப்பட்ட அச்செய்தியானது, முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும். வேண்டுமென்றே கபடநோக்குடன் ஊழியர்களின் கவனத்தை திசை திருப்பும் நோக்குடன்வெளியிடப்பட்ட செய்தியென்றே நாம் இதனைக் கருதுகின்றோம் குறிப்பாக அச்செய்தியின் இறுதிப் பகுதியில் 'சிலர் கூட்டுத்தாபன ஊழியர்களிடம் தாம் கொழும்பு சென்று பணம் பெற்றுத் தருவதாகக் கூறி தலா 1800ரூபாப்படி பணம் அறவிட்டு மோசடியில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.' இது தேவையற்ற ஒருகுற்றச்சாட்டாகும்.

இக்கணக்காளரும் எமது சங்கத்தின் உறுப்பினராக இருக்கின்றார். அவர் சங்கத்தின் செயற்பாடுகளையும் அவற்றின் உண்மைத்தன்மையினையும் அறிந்தவர். அவ்வாறான ஒருவர் இவ்வாறு தவறான செய்தியினை வெளியிட்டிருப்பது தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் சுயநல நோக்கம் கொண்டதும் ஊழியர்கட்கு துரோகம் இழைக்கும் ஒரு செயலுமாகும்.

இக்கணக்காளர் பலஆண்டுகளாக வேறு பல நிறுவனங்களில் முழுநேர ஊழியராகக் கடமையாற்றி சம்பளம் பெற்றுக் கொண்டு உப்புக் கூட்டுத்தாபனத்திலும் சம்பளம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இவரது கடமை அலட்சியத்தினாலும் ஒழுங்கீனங்களினாலும் பண மோசடிகளினாலும் கடந்த பத்து ஆண்டுகளாக எமது ஊழியர்கள் தமது கொடுப்பனவுகளைப் பெற முடியாமல் துன்பத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறான தனது 'திருகுதாளங்களை' மூடி மறைப்பதற்காகவே மேற்படி உண்மைக்குப் புறம்பான செய்தி ஒன்றினை வெளியிட்டுள்ளார் என நாம் கருதுகின்றோம்.

கணக்காளரின் இச்செய்தியானது 12-11-2000 அன்று நடைபெற்ற எமது சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் நோக்கம் கொண்டதென்பதுதெளிவாகின்றது. ஆகவே சங்க உறுப்பினர்கள் உண்மை நிலையினைப் புரிந்து விழிப்புடன் இருக்குமாறு சங்கம் பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றது. இவ்வாறு அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மன்னார் மாவட்ட பட்டதாரிகளுக்கு சமுர்த்தி முகாமையாளர் பதவி

### அமைச்சர் டக்ளஸ் உறுதி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்துவிட்டு வேலையற்றிருப்போருக்கு உடனடியாக சமுர்த்தி முகாமையாளர் நியமனம் வழங்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

அண்மையில் தம்மை சந்தித்த மன்னார் மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகளிடமே மேற்கண்ட உறுதிமொழியை அவர் வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

மன்னார் மாவட்டத்தில் நிலவும் விஞ்ஞான ஆசிரியர்கள் வெற்றிடங்களிலும் மன்னார் மாவட்டத்தில் உள்ள அரசஅலுவலகங்களில்நிலவும் வெற்றிடங்களில் பொருத்தமானவற்றிற்கு பட்டதாரிகளை நியமனம்செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மன்னாரிலும் வன்னியின் ஏனைய பகுதிகளிலும் உள்ள மருந்து நிலையங்களிலும் நிலவும் வெற்றிடங்கள் விசேட சலுகை அடிப்படையில் நிரப்பப்பட உள்ளதாகவும் இதற்காக மருத்துவர்களுடன்பேச்சுவார்த்தை ஒன்றில் தாம் ஈடுபட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி. தலைவர் அமைச்சுப்பொறுப்பை ஏற்றமை குறித்து தாம் மிகவும் மகிழ்ச்சியடையவதாகவும் தமிழர்களின் பலம் அரசியல் ரீதியில் அதிகரித்துள்ளதையே இது காட்டுகின்றது என்றும் மேற்படி பட்டதாரிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (க)

## கொட்டும் மழையிலும் கூட்டுறவுகிளையில்திருட்டு

### கோண்டாவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பொற்பதி வீதியில் இயங்கிவந்த, பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிளையில் 35 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த 20 ஆம் திகதி கடும் மழை பெய்துகொண்டிருந்த நள்ளிரவு வேளையில், கட்டடத்தின் சீற்றைக்கழற்றி உள் நுழைந்த திருடர்குழு ஒன்றே இக்களவில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

அத்துடன் கழற்றப்பட்ட சீற் இடைவெளியூடாக மழைநீர் உட்சென்றதால் 9 மாமூடைகள் சேதமாகியிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-5)

## அடிப்படை வசதிகளற்ற அனலைதீவு படகு சேவை மக்கள் அதிருப்தி

(அனலைதீவு)

அனலைதீவுக்கான பயணிகள் கடற்போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற படகில் அடிப்படை வசதிகள் ஏதுமில்லை என பயணிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி படகில், முதலுதவி பெட்டியோ, குடிநீர் வசதியோ,அன்றி பாதுகாப்புச்சாதனங்களோ எவையுமின்றி பொதுமக்கள் பெருத்த அசௌகரியங்களின் மத்தியில் பயணம் மேற்கொள்கின்றனர்.

மேற்படி படகுச்சேவையை தனியார் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ-75)

## தொடரும் திருட்டு

(ஈச்சமோட்டை)

நேற்று முன்தினம் இரவு ஊரடங்கு வேளையில் சுண்டுக்குளி பகுதியிலமைந்துள்ள வீடொன்றின் கூரைத்தகடுகள் பல திருட்டுப் போயுள்ளன.

அதே தினத்தில் வேறு வீடுகள் சிலவற்றின் கதவு, ஜன்னல் என்பனவும் களவாடப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது. (உ-59)

## இரண்டாயிரம் பேர் விண்ணப்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரியின் புதிய ஆண்டுக்கான கற்கை நெறிகளுக்கு சுமார் 2000 பேர் விண்ணப்பித்துள்ளதாக கல்லூரி முதல்வர் எம். குணரத்தினம் தெரிவித்துள்ளார். (ச-60)

## பாராட்டி பரிசளிப்பு

கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற5ஆம்ஆண்டு புலமைப்பரிசில்பரீட்சையில் சித்தியடைந்ததொல்புரம் அ.மி.த.க. பாடசாலை மாணவர்களைப் பாராட்டி பரிசளிக்கும் வைபவம் அண்மையில் பாடசாலை அதிபர் வி.மீனேஸ்வரன்தலைமையில் நடைபெற்றது. (செ)

## சுகாதார நிலையம்

(கரணவாய்)

கரணவாய் வடமேற்கு கொற்றாவத்தைப் பகுதியில் யு. என். எச். சி. ஆர். நிறுவனத்தின் அனுசரணையுடன் புதியசுகாதார நிலையம்ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இதனால்நவிண்டில், கொற்றாவத்தை, பொலிகண்டி உள்ளிட்ட சிலபகுதி மக்கள் பெரிதும் நன்மையடைய முடியும். (ச - 27)

## கரவெட்டி பிரதேசத்திற்கு நிதி ஒதுக்கீடு

(மந்திகை)

கரவெட்டி பிரதேசத்தில், 14 இலட்சரூபா செலவில் இந்து ஆலயங்கள் மற்றும் பாடசாலைக் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருவதாக ஈ.பி.டி.பி.யின் உடுப்பிட்டி தொகுதி அமைப்பாளர் வல்லிபுரம் நடராசா தெரிவித்துள்ளார்.

கரவெட்டி இருதயக்கல்லூரியில் 4 இலட்சம் செலவிலும் நெல்லியடி இந்து மிழ்க்கலவன் பாடசாலையில் ஒன்றரை இலட்சம் செலவிலும் கரவெட்டி சரஸ்வதி மகளிர் வித்தியாலயத்தில் ஒன்றரை இலட்சம் செலவிலும் கம்பர்மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஒன்றரை இலட்சம் செலவிலும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் 2 இலட்சம் செலவிலும் உடுப்பிட்டி றோ.க.பாடசாலையில் இரண்டு இலட்சம் செலவிலும் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் கலிகை கந்தசாமி கோவில்,நெல்லியடி முருகன் ஆலயம் என்பனவும் தலா ஒரு இலட்சம் செலவில் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன. (உ-23)

## இராசி பலன்

29-11-2000
(கார்த்திகை 14, புதன்)
திருதியை மு.ப 9 21 வரை
பூராடம் பி.இ 12.16 வரை
ராகுகாலம் 12 14-1 44
சுபநேரம் 04 44-06 14
அமிர்தம் சதுர்த்தி விரதம்

**மேடம்**
பிரயாணம், உடல் உழைப்பு, கட்டுப்பாடு, அதிகாரிகள் வெறுப்பு, வீண் பயம்.

**இடபம்**
எதிர்பாராத அச்சம், நோய் உண்டாதல், போசன சுகம், காரியத் தாமதம்.

**மிதுனம்**
கௌரவமான நிலை, தன வரவு, பிரயாணம், முயற்சி பலிதம்.

**கடகம்**
சந்தோசமிகுதி, சுகவாழ்வு, எதிரிகளால் நன்மை, காரிய ஜெயம்.

**சிங்கம்**
புத்திரர்களால் கவலை, சிறுவியாதி, முயற்சி மந்தம், பிரயாணத் தடங்கல்.

**கன்னி**
பயந்த சுபாவம், உறவினர்களால் வெறுப்பு, காரியம் கைகூடும், கல்விச் சிறப்பு.

**துலாம்**
பிரயாணம், சகோதரர் உதவி, முயற்சி பலிதம், தன வரவு.

**விருச்சிகம்**
வீண்விவாதம், பணச் செலவு, உஷ்ண வியாதி, காரிய ஜெயம்.

**தனுசு**
பொருள் வரவு, போசன சுகம், சயன சுகம், புதிய சிந்தனை.

**மகரம்**
காரியத் தாமதம், அலைச்சல், மனக்கிலேசம், எதிர்பாராத நன்மை.

**கும்பம்**
சந்தோசமான சம்பவம், தனலாபம், கீர்த்தி, குடும்ப சுகம்.

**மீனம்**
பெரியோர் சந்திப்பு, தொழில் விருத்தி, ரோகம், முயற்சி கைகூடும்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## இளைஞன் உயிர்காக்க உதவுக!

சதீஸ்குமார் தம்பித்துரை (வயது 21) என்ற அரசடி வீதி கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த இளைஞர் இரு சிறுநீரகங்களும் பாதிப்புற்ற காரணத்தினால் இந்தியா சென்று சிகிச்சை பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுளளார்.

இவரின் உயிருக்கு, எதிர்கால ஒளிமிகு வாழ்வுககு உத்தரவாதமளிக்க வேண்டிய பொறுப்பு மனிதநேயர்மிக்க அனைவர் கைகளிலும் தங்கியுள்ளது.

எனவே, அன்புடையவர்களே! உங்களின் பிள்ளையைக் காக்க நிதியுதவி அளிக்க விரும்பும் நீங்கள், ஹற்றன் நஷனல் வங்கியில் 23378 என்ற கணக்கு இலக்கத்தில் பணத்தை இட்டு பேருதவி புரிவீர்!

சாயி இளைஞர் சேவையில் தன்னை அர்ப்பணித்து, மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக, அமைதிமிகு வாழ்வுக்காக பாடுபட்ட இளைஞனின் உயிரைக் காக்க முன்வருவீர்!.

(ஆ-ர்)

## அதிபர்களுக்கான கருத்தரங்கு இன்று

(கோப்பாய்)

ஆசிரியர் சேவைக்காலப் பயிற்சிச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக யாழ். கல்வி வலய அதிபர்களுக்கான விழிப்பூட்டல் கருத்தரங்கும் செயலமர்வும் இன்றும் நாளையும் யாழ் இந்துமகளிர் கல்லூரியில் மு.ப. 9 மணி தொடக்கம் பி.ப. 5 மணி வரை நடைபெறவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளயாட்டுத்துறை அமைச்சும், ஜேர்மன் தொழினுட்ப கூட்டுழைப்பகமும் இணைந்து நடத்தும் இக்கருத்தரங்கில் சேவைக்காலப் பயிற்சிச் செயற்றிட்ட அலுவலர்கள் மற்றும் யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-79)

## ஒளிவிழா

(சுண்டுக்குளி)

நெடுந்தீவு றோமன்கத்தோலிக்க மகளிர் கல்லூரியின் ஒளிவிழா எதிர்வரும் வியாழக்கிழமை கல்லூரியின் அதிபர் அருட் செல்வி ஜெயசீலி றொட்றிகோ அவர்களின் தலைமையில் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக பங்குத்தந்தை மொன்பேட் அடிகளாரும் கௌரவவிருந்தினர்களாக அருட். திரு ஞானசந்திரன், தென்னிந்திய திருச்சபை போதகர் வண. ஆனந்தராஜனும் சிறப்பு விருந்தினர்களாக தீவக கல்வி வலய, கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகர் எஸ். திருஞானசீலனும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

(உ-110)

## கொடுப்பனவு இல்லை

(சுண்டுக்குளி)

கொழும்புத்துறை, நாயன்மார்கட்டு, ஈச்சமோட்டை, பாண்டியன்தாழ்வு. கொய்யாத்தோட்டம் ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு, இன்னமும் இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

(உ-110)

## விடைகள்

நவம்பர் 27, 28ஆம் திகதிகளில் வெளிவந்த க.பொ.த. (சா.த) கணிதம்பகுதி ஒன்றுக்கான விடைகள்

1. 20
2. $\frac{C+3}{C}$
3. (அ) $2^4 a^2 b^0 c$
   (ஆ) 2ab
4. B , AC, AB
5. 33 000 026
6. ரூ 1210
7. 50( $m^2$
8. 22
9. (அ) 20
   (ஆ) 14
10. நாணயம் A இன் மையத்தை மையமாகவும் 3Cm ஆரையுமுடையவட்டத்தின்பரிதி.
11. ரூ 300
12. ரூ. 300
13. 135 பாகை
14. (அ) 4
    (ஆ) 20
15. 432
16. 99xசதம்அல்லது 0.99x ரூபா
17. 3
18. (அ) 50 பாகை
    (ஆ) 140 பாகை, 40 பாகை
19. (அ) 3
    (ஆ) 1
20. ரூ. $\frac{x}{12} + \frac{y}{2}$ = ரூ. $\frac{x+6y}{12}$
21. (அ) $x=-2$
    (ஆ) (-2, -16)
22. (1) 80 பாகை
    (2) 50 பாகை
23. 050 பாகை
24. $\frac{x}{y} = \frac{m}{n}$
    ∴ $\frac{x}{y} + 1 = \frac{m}{n} + 1$
    $\frac{x}{y} + \frac{y}{y} = \frac{m}{n} + \frac{n}{n}$
    $\frac{x+y}{y} = \frac{m+n}{n}$
25. 18Cm
26. 1000
27. $\frac{3}{5}$, 0.65, 0.7, $\frac{3}{4}$
28. (1) 2 -30=180
    (2) 125 பாகை
29. (1) $BC^2 = B^2 + AC^2$
    (2) 9Cm
30. (1) 6:8:9
    (2) ரூ. 120

## புனர் நிர்மாணம்

(கரணவாய்)

கரணவாய் பகுதியிலுள்ள அண்ணாசிலை என்னும் இடத்தில் அமைந்துள்ள வள்ளுவர் சனசமூக நிலையம் புனர்நிர்மாணம் செய்யப்படுகிறது.

இச்சனசமூக நிலையம் புனர்நிர்மாணத்துக்குத் தேவையான நிதியை கரவெட்டிப்பிரதேசசபை ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-27)

## உதை பந்தாட்டம்

(சுன்னாகம்)

வலிகாமம் லீக்கினால் நடத்தப்படும்அமரர் அ. தம்புராசா ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்று வருகின்றது.

மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டரங்கில் நடைபெறுகின்ற இப்போட்டியில் இன்று சுழிபுரம் விக்ரோறியா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அளவெட்டி 'யுத்'' விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ச)

## போக்குவரத்து செய்யமுடியாத வீதி

(நல்லூர்)

யாழ்ப்பாணம் பலாலி வீதியிலிருந்து நாவலர்வீதி, வேம்படி பிள்ளையார் வீதி என்பவற்றுக்குச் செல்லும் அன்னசத்திர ஒழுங்கை, போக்குவரத்துக்கு ஒவ்வாத வகையில் காணப்படுகிறது. (உ-103)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை - 2000

## விஞ்ஞானம் பகுதி - I

நேரம் : 1 மணி

தொகுப்பு: திரு. K. பாலமுருகன் (ஆசிரியர்)

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

01) கடத்து திறனை அளவிடும் அலகு பின்வருவனவற்றுள் யாது?
   1) ஓம் 2) ஓம்m 3) ஓம்$m^{-1}$ 4) ஓம்$^{-1}m^{-1}$

02) வியர்வையில் வெளியேற்றப்படும் பொருட்களில் கூடிய வீதம் காணப்படுவது?
   1 Nacl 2) $H_2O$ 3) யூரியா 4) யூரிக்கமிலம்

03) காற்று இன்றிய சுவாசத்தில் தாவரங்களில் வெளிவிடப்படுவது?
   1) காபனீரொட்சைட் 2) இலற்றிக்கமிலம் 3) அற்ககோல் 4) ஒட்சிசன்

04) 3ஓம் தடைகள் மூன்று சமாந்தரமாக இணைக்கும் போது அதன் சமவலுத்தடை
   1) 3 ஐவிட உயர்வானது 2) 3 ஐவிட குறைவானது 3) மூன்று ஆகும் 4) கூறமுடியாது

05) றேடியோ அலை ஒரு
   1) நெட்டாங்கு அலை 2) குறுக்கு அலை
   3) நிலையான அலை 4) மின்காந்த அலை ஆகும்.

06) நாடியினாலும் நாளத்தினாலும் குருதியை பெறும் ஓர் உறுப்பு -
   1) நுரையீரல் 2) ஈரல் 3) சதையி 4) இரப்பை

07) வானொலிச் சுற்றுக்களில் பயன்படும் கொள்ளளவி யாது?
   1) எளிய கொள்ளளவி 2) மாறும் கொள்ளளவி
   3) மின்பகுப்பு கொள்ளளவி 4) சீராக்கும் கொள்ளளவி

08) உணவுச் சங்கிலியில் ஓர் படியில் இருந்து அடுத்த படியிற்கு கடத்தப்படும் சக்தியின் அளவு –
   1) 1% 2) 10% 3) 1/10% 4) யாவும் அல்ல

09) அழுத்த வேறுபாடு மின்னோட்டத்திற்கு நேர்விகித சமன் என கூறியவர்
   1) வோல்ற்றா 2) ஓம் 3) பிளெமின் 4) நியூட்டன்

10) அமிலங்கள், காரங்கள், நடுநிலை ஆகிய பதார்த்தங்களை அறிவதற்கு சிறந்த காட்டி
   1) செம்பாசிச்சாயத்தாள் 2) பினோப்தலின்
   3) PH தாள் 4) செவ்வரத்தம்சாறு

11) கொள்ளளவி ஒன்றில் கொள்ளளவம் தங்கியிராத காரணி
   1) பரப்பு 2) மின்னுழைய பதார்த்தம் 3) இடைத்தூரம் 4) நிறை

12) பூஸ் உருகாமல் வைத்திருப்பதற்கு றெஜிபோம் பெட்டி பயன்படுத்தப் படுவதற்கு றெஜிபோமின் எவ் இயல்பு காரணம்
   1) குறைந்த வெப்ப கொள்ளளவு 2) குறைந்த வெப்ப கடத்தாறு
   3) கூடிய வெப்ப கொள்ளளவு 4) உயர் வெப்ப கடத்தாறு

13) பின்வருவனவற்றுள் எது முதலாம் வகை நெம்பு ஆகும்
   1) கத்தரிக்கோல் 2) தராசு 3) சாவனம் 4) பாக்கு வெட்டி

14) A எனும் மூலகத்தின் ஒட்சயிட்டின் சூத்திரம் AO ஆகும் அம்மூலகத்தின் ஐதரொட்சயிட்டின் சூத்திரம் யாது?
   1) AOH 2) $A(OH)_2$ 3) $A_2OH$ 4) $AO_2H$

15) மோட்டார் ஊர்தி ஒன்று 4S நேரத்தில் 6 m தூரம் இடம் பெயருமாயின் ஊர்தியின் கதி யாது?
   1) $0.5 ms^{-1}$ 2) $1.5 ms^{-1}$ 3) $2\ oms^{-1}$ 4) $2.5 ms^{-1}$

16) தாவரங்களின் இலைகளில் ஒளித்தொகுப்பின் போது உண்டாக்கப்படும் குளுக்கோசை தாவரத்தின் வேர்வரைக்கும் கொண்டு செல்லும் இழையம் பின்வருவனவற்றில் யாது?
   1) காழ் 2) மாறிழையம் 3) உரியம் 3) மையவிழையம்

17) தற்கால ஆவர்த்தன அட்டவணையை உருவாக்குவதற்கு அடிப்படையாய் அமைந்த இயல்பு மூலகங்களின் அணுக்களின்
   1) திணிவு எண் 2) அணுஆரை
   3) அணுக்கனவளவு 4) இலத்திரன் நிலையமைப்பு

18) இரு தளவாடிகள் ஒன்றிற்கு ஒன்று செங்குத்தாக வைக்கப்படும் போது அதற்கு இடையில்வைக்கப்பட்ட பொருளினால் உண்டாக்கப்படும் விம்பங்களின் எண்ணிக்கை
   1) 1 2) 2 3) 3 4) 4

19) தான் வெப்பத்தை கொள்ளும் அளவு கூடிய திரவம் யாது?
   1) மண்ணெண்ணெய் 2) தேங்காயெண்ணெய் 3) இரசம் 4) நீர்

20) நீறாத சுண்ணாம்பின் இரசாயன சூத்திரம் யாது?
   1) $CaCo_3$ 2) Cao 3) $a(OH)_2$ 4) $Na_2Co_3$

## சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவக மாணவர் ஒன்றியத்தினால் இன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு 'வித்தகம்' சஞ்சிகை வெளியிடப்படவுள்ளது

இவ் வெளியீட்டு விழாவில் வி. அபிராமியின் இறைவணக்கத்தைத் தொடர்ந்து ம. பிரபாகரன் வரவேற்புரையையும், மாணவர் ஒன்றியத் தலைவர்கள் வே. சிவாகரன், க. பாலமுருகன் தலைமை உரையையும், யாழ். பாராளுமன்றஉறுப்பினர்கேவி குகேந்திரன் பிரதம விருந்தினர் உரையையும், இயக்குநர் த இராஜரட்ணம் சிறப்பு விருந்தினர் உரையையும், இ. சுகுமார் வெளியீட்டுரையையும் நிகழ்த்தவுள்ளார்.

சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர்வி: அருளானந்தம் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்கிறார்.

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் துறைத் தலைவர் திருமதி நி. தர்மசிலன் ஆய்வுரையை நிகழ்த்தவுள்ளனர்.

மேலும் எண்மர் சிறப்புப் பிரதிகளைப் பெறவுள்ளார்கள். (செ)

## அடையாள அட்டைகள்

(சுண்டிக்குளி)

சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தில் இருந்து இடம்பெயர்ந்த சிலரின் தேசிய அடையாளஅட்டைகள்யாழ். செயலகத்தில் இயங்கும் ஆட்பதிவு அலுவலகத்தில் உள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ் அட்டைகளுக்கு உரியவர்களை ஆட்பதிவு திணைக்களத்திற்கு நேரில்வந்து பெற்றுக்கொள்ளுமாறும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

பெயர் விபரங்கள்நாளைய 'வலம்புரி' பத்திரிகையில் பிரசுரமாகும். (செ)

# ஊழியருக்கான, சம்பளத்திட்டம் அமுல்செய்ய தாமதம்
# சுற்றறிக்கைமுரண்பாடுகள்காரணம்
## கூ.ஊழியர் ஆணைக்குழு செயலர் விளக்கம்

(தென்மராட்சி)
கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட புதியசம்பளத் திட்டத்தினை யாழ்.மாவட்டத்தில் அமுல் செய்வதில் கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர்கள் அக்கறை எடுக்கவில்லை என வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளரின் கூற்று ஏற்புடையதல்ல.

இவ்வாறு யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரான சீ.வி. கந்தையா சிவஞானம் திருகோணமலையிலுள்ள வடக்கு -கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் செயலாளருக்கு நேற்றைய தினம் அனுப்பி வைத்துள்ள 'பக்ஸ்' செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

புதிய சம்பளத்திட்ட அமுலாக்கத்திற்கு கூட்டுறவுஊழியர் ஆணைக்குழுவினால் சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட சுற்றறிக்கையில் விதிக்கப்பட்ட நிபந்தனைகள்தான் தடையாக உள்ளனவே தவிர தலைமைத்துவம் அல்ல.

வாழ்க்கைச்செலவு அதிகரிப்பைச் சமாளிக்க வென நிபந்தனை எதுவுமின்றி அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட இடைக்காலப்படிக் கொடுப்பனவுக்கு கூட்டுறவுத் துறைக்கு மட்டும் நிபந்தனை விதிப்பதைஎவ்வாறு நியாயப் படுத்த முடியும்.

ஒருபுறத்தில் சம்பளத்திட்டம், இடைக்காலப்படி என்பனவற்றினை வழங்க வேண்டுமென அங்கீகரித்துவிட்டு மறுபுறத்தில் நிபந்தனைகளை விதிப்பதுமுரண்பாடாகவே அமைந்துள்ளது எனவும் அச்செய்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை கூட்டுறவு ஊழியர் ஆணைச்குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட புதிய சம்பளத்திட்டம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 5ஆயிரம் கூட்டுறவு ஊழியர்களுக்கும் இன்னமும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

(உ-77)

## இன்று ஒரு தகவல்
# இறைவனிடம் கேட்க வேண்டியது

ஓர் ஊரிலே ஓர் இராசா இருந்தார். அவர் ஓவியங்களையும் பல கலைப் பொருள்களையும் கொண்டு ஒரு பெரிய கண்காட்சி வைத்தார். மிகத் திறமையான கலைப் பொருள்கள் எல்லாம் காட்சிக்கு வைக்கப்பட்டன. அக்கண்காட்சிக்கு எவரும் வரலாமெனவும், ஒவ்வொருவரும் தமக்கு வேண்டிய எதையும் எடுத்துச் செல்லலாமெனவும் அரசன் அறிவித்தான். பெருந்தொகையான ஆண்களும், பெண்களும் அக் கண்காட்சிக்குச் சென்று தமக்குப் பிடித்த பொருள்களை எடுத்துச் சென்றார்கள்.

அவர்களுள் ஒரு பெண் அக் காட்சியில் இருந்த எல்லாப் பொருள்களையும் பார்த்துவிட்டு, எதையும் எடுக்காமல் முன்வாசல் கதவூடாக வெளியே வந்தாள். அங்கு வந்த எல்லாப் பிரமுகர்களிலும் இவள் மட்டும்வெறுமனே வருவதை மகாராசா கண்டார். இதற்கு என்னகாரணம் என அறிவதற்காக அரசன் அப்பெண்ணை அணுகி, ''அம்மணி உங்களைக் கவரக் கூடிய பொருள்கள் ஒன்றும் கண்காட்சியில் இல்லாதது எப்படி? அங்கு பலவிதமான கவர்ச்சியுள்ள பொருள்கள் காட்சிக்கு உள்ளனவே. அவை ஒன்றும் உங்களைத் திருப்தி செய்ய இல்லையா?'' எனக் கேட்டார், அதற்கு அவள் ''அங்கே எண்ணிக்கையற்ற விரும்பத்தக்க பொருள்கள் இருக்கின்றன'' என்றாள். ''உங்களுக்குத்தேவையானது அற்றுள்ஒன்றும்இல்லையா?'' என அரசன் கேட்டான். ''இல்லை'' என்றாள் அவள். ''அப்படியானால் உங்கள் விருப்பம் என்ன அதை நான் உங்களுக்குத் தருவேன்'' என்றான் அரசன். அதற்கு அவள், ''மகாராசா எனக்குத் தேவையானதை நீங்கள் தருவதாகச் சத்தியம் செய்கிறீர்களா? உங்கள் கொடை உண்மையானதா? உங்கள் சொற்களைக் காப்பாற்றுவீர்களா?'' என்றாள். ''நிச்சயமாக'' என்றான் அரசன். ''அப்படியானால் எனக்கு நீங்கள்தான் வேண்டும்'' என்றாள் அவள். மகாராசா தனது சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காகத் தன்னையே அவளிடம் ஒப்படைத்தார். மகாராசா தானாகவே அவளுடையவரானதும், அக் காட்சியில் இருந்த அனைத்துப் பொருட்களும் தாமாகவே அவளுடையதாயின.

இப் பிரபஞ்சம் கடவுளால் உருவாக்கப்பட்ட ஒருபெரிய கண்காட்சியே! இங்கு வரும் அனைவரும் தமக்கு விரும்பியதைத் தேர்ந்தெடுக்கிறார்கள். சிலர் பொருளையும், சிலர் தொழிலையும் தேடுகிறார்கள். ஆனால் ஒருவரும் ''சுவாமி! நான் ஒன்றை அல்லது மற்றதை எடுத்தால், இதனால் நான் அடையும் இலாபமென்ன? நீங்கள் என்னுடையவரானால் இவையெல்லாம் என்னுடையவையாகும்'' என்ற கேள்வியைக் கேட்கிறார்களில்லை! இப்பிரபஞ்சத்துள் வந்ததும், நீங்கள் தெய்வத்தைத் தேடுங்கள். அப்படியானால் உலகம் முழுவதும் உங்களுடையதாகும். மாறாத நிலையான ஒன்றைத் தேடுங்கள். ஒன்றுமாறி ஒன்றைத் தேடி ஓடுவதில் கருத்தில்லை, அதற்கு முடிவுமில்லை. அதில் திருப்தியுமிராது. இன்று நீங்கள் பெற்ற ஒன்று நாளை அதன் வசீகரம் இழந்து விடும். அதனால் வேறு புதிய ஒன்றை விரும்புவீர்கள். ஆனால் தெய்வீகத்தை நீங்கள் பெற்றுவிட்டால், எல்லாம் கிடைத்து விடும்.

நன்றி
பாபா சொன்ன கதைகள்

# போத்தலை உடைத்து தலையில்குத்திய மாணவன்

(யாழ்ப்பாணம்)
அண்மையில் வெளியாகிய க.பொ.த உயர்தரப் பரீட்சையில் எதிர்பார்த்த சித்தியைப் பெறத்தவறிய மாணவன் ஒருவன் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளான்.

பரீட்சைப் பெறுபேறு குறைவடைந்தமையால் மனமுடைந்து, போத்தல் ஒன்றை உடைத்துத் தனது தலையில் குத்தினார்.

யாழ் புனிதசம்பத்திரிசியார் கல்லூரியில் பயின்ற மாணவன் ஒருவனே காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-105)

## தொண்டர் ஆசிரியர் விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)
தொண்டர் ஆசிரியர்களுக்கான விசேட கூட்டம் நாளை வியாழன் இடம்பெறவுள்ளதாக யாழ். மாவட்டத் தொண்டர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில்காலை8 00மணிக்கு ஆரம்பமாகவுள்ள இக் கூட்டத்தில் சங்கத்தில் பதிவு உள்ளவர்கள் அனைவரும் தங்களது பதிவினை உறுதிப் படுத்திக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

# வலிப்பு வந்த சிறுமி விளக்கருகே விழுந்தாள்
## எரிகாயங்களுடன் மருத்துவமனையில்

(யாழ்ப்பாணம்)
வாய்பேசாத சிறுமி, வலிப்பு வந்து விளக்கு அருகில்விழுந்ததால், உண்டான எரிகாயங்களுக்கு சிகிச்சை பளிக்கவென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிறவுண் வீதியைச் சேர்ந்த மதியழகன் மயூரி (வயது 12) என்ற சிறுமிக்கு ஏற்பட்ட இத் துன்பம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

கடந்த சனியன்று இரவு 9 மணியளவில் மேற்படி சிறுமி விளக்குக்கு அருகாமையில் நின்றுகொண்டிருந்தவேளை திடீரென வலிப்பு ஏற்பட்டது.

இதனால் விளக்கின்அருகில் விழவே தீப்பற்றிக் கொண்டது.

தெய்வாதீனமாக உயிருக்கு ஆபத்து ஏற்பட முன்னரே உறவினர்களால் காப்பாற்றப்பட்டாள். (உ-105)

## தீவுப்பகுதியில் மீன் விலை வீழ்ச்சி

(கரம்பொன்)
அண்மையில் பெய்த பெருமழை காரணமாக தீவுப்பகுதிகளில் மீன்களின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

இதேவேளை இப்பகுதியில் பிடிக்கப்படும் தரமான மீன் வகைகளை வியாபாரிகள் யாழ். நகருக்கு எடுத்துச் சென்று கூடிய விலையில் விற்பனை செய்வதிலேயே அதிக கவனம் செலுத்துவதனால் தீவுப்பகுதியினருக்குத் தரமான மீன் வகைகள் கிடைப்பதில்லை என அம்மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(ச)

# திருட்டுக்களை ஒழிக்க விழிப்புக் குழுக்கள்

(கரணவாய்)
கரவெட்டிப் பிரதேச மக்கள் திருட்டுக்களை ஒழிப்பதற்காக விழிப்புக்குழுக்களை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை தெரிந்ததே.

இதறகமைய கரவெட்டி மேற்கு, கரவெட்டிகிழக்கு, கரவெட்டிமத்தி, மற்றும் துன்னாலை போன்ற பகுதிகளை உள்ளடக்கிய மக்களே இவ்விழிப்புக் குழுக்களை அமைக்கும் செயற்பாட்டில் மும்முரமாக முனைந்துள்ளனர். (ச-27)

# கொழும்புத்துறையில் கிளைமோர் மீட்பு

குப்பிளான், கோக்குவில், கொழும்புத்துறைஆகிய பகுதிகளில் இராணுவத்தினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதுமறைத்து வைக்கப்பட்டிருந்த மூன்று கிளைமோர் குண்டுகளுடன், மூன்று நிலக் கண்ணிவெடிகளும் கைப்பற்றப்பட்டதாக விஷேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

இதே வேளை மட்டுவில் தெற்கு, நாசர் கோவில் முகமாலை ஆகிய பகுதிகளில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் ஐந்து புலிஉறுப்பினர்கள் கொல்லப்பட்டதாகவும் விஷேட ஊடகத் தகவல் நிலையம் மேலும் அறிவித்துள்ளது. (இ)

# அதிபர்கள் கவனத்திற்கு

(துன்னாலை)
தென்மராட்சி கல்வி வலயத்தில் இருந்து, கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்க்கான அனுமதி அட்டைகள் யாவும், தற்காலிகமாக நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இயங்கும் தென்மராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தில் இருப்பதாகவும், சம்பந்தப்பட்ட அதிபர்கள் அனைவரும் இதனைப்பெற்றுமாணவர்க்கு விநியோகிக்குமாறும் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

(உ-41)

# 32 முன்பள்ளிகள் 2 வருடத்தில் புனரமைப்பு
## சர்வோதய ஏற்பாட்டிலாம்

(தென்மராட்சி)
இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளை கடந்த இருவருட காலத்தில் 32 முன்பள்ளிக் கட்டடங்களை 15 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்துள்ளது.

அத்துடன் அவுஸ்திரேலியா நிதிஉதவியுடன், சுமார் 400 பயனாளிகளுக்கு வருவாய் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 10 லட்சத்து 86 ஆயிரம் ரூபா நிதிஉதவி வழங்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர இவ் வருடம் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி பிரதேசங்களில் இருந்து யுத்த அனர்த்தங்கள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களில் கல்வி பயிலச் செல்கின்ற ஆயிரக்கணக்கான பாடசாலைச் சிறுவர்களுக்கு வேண்டிய கல்வி உபகரணங்களையும் சர்வோதய சிரமதான சங்கம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது என செயல் திட்ட இயக்குநர் எஸ்.வீ. சங்கரப்பிள்ளை கூறியுள்ளார்.

அதேவேளை வருவாய் ஊக்குவிப்புத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன் தொகையைக் குறித்த பயனாளிகளிடம் இருந்து மீளப் பெறுவது பெரும் கஷ்டமாக இருப்பதாகவும் அவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. உ-77)

# காடு வளர்ப்புத் திட்டம் கைவிடும் நிலையில்
## நாட்டுச்சூழ்நிலைகாரணமாம்

(தென்மராட்சி)
உள்ளூர் அரசசார்பற்ற அமைப்பாகிய ஊற்று நிறுவனத்தினால் மக்கள் பங்களிப்புடன் அமுல் செய்யப்பட்ட 500 ஏக்கரிலான மணற்காடு சவுக்குத் தோட்டமும், 20 ஏக்கரிலான நாகர்கோயில் சவுக்கங்காடுவளர்ப்புத்திட்டமும் மாவட்டத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலையால் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சூழல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பல லட்சம் ரூபா செலவில் மேற்படி இரு திட்டங்களும் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் கடந்த காலங்களில் அமுல் செய்யப்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன், கிராமிய தற்காப்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 35 கிராமங்களில் இருந்த திட்டப்பயனாளிகளுக்கும், பிரதான உழைப்பாளர்களை இழந்த தாய்மார்கள் 100 பேருக்கு தொழில் முயற்சிகளுக்கெனவும், 100 விவசாயிகளுக்கு சுழற்சி முறைக்கடனாக மொத்த நிதியாக 9லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ள போதிலும்கூட, அவற்றினை மீளப்பெற முடியாத நிலைப்பாடு நிலவிவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேசமயம்இடம்பெயர்ந்த குழந்தைகளுக்கான பால்மா விநியோகத்திட்டத்தின் கீழ் ஆயிரம் குழந்தைகளுக்கு நான்கு லட்சம் ரூபா செலவில் மேற்குறித்த திட்டம் அமுல் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

(உ-77)

**ஸ்திரமற்ற நிலையில்**

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்

# பக்கம் சாருவதில் பத்திரிகைகள்

(வாஷிங்டன்)
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவு வெளிவந்தாலும் ஸ்திரமற்ற தன்மை ஏற்படும் வாய்ப்புகள் நிலவுவதாக செய்தியாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இந்த வகையில் அமெரிக்க பத்திரிகைகள் பல ஜனாதிபதி வேட்பாளர்புஷ் அவர்களுக்கு கௌரவம் தேடும் செய்திகளுக்கு அதிருப்தி தெரிவிக்கும் வகையில் ஆசிரியதலையங்கங்களைத் தீட்டி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்தத் தலையங்கங்களில் வெள்ளிக்கிழமை வரை கணிப்பவை அறுதியான முடிவென்று தெரிவிக்க வேண்டாமென்றும் போட்டி முடியவில்லையென்றும் தெரிவித்துள்ளன.

அமெரிக்க நடுவண் நீதிமன்று தீர்ப்பு வெள்ளிக்கிழமை வெளிவரும் வரை ஸ்திரத் தன்மையில்லாத முடிவாகத்தான் இருக்குமென்றும் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வாஷிங்டன் போஸ்ட் என்ற பத்திரிகை தெரிவிக்கையில்; வெள்ளி வெளிவர இருக்கும் நீதிமன்றத் தீர்ப்புக்கிடையே ஸ்திரமான முடிவு அறிவிக்கப்படுவது அர்த்தமற்றது என்றும் தெரிவித்துள்ளது

இதே வேளை சிக்காக்கோ நகர் பத்திரிகை தெரிவிக்கையில்; இப்பொழுதே தீர்ப்பு முடிந்து விட்டதென்று குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க பத்திரிகைகள் புஷ்சிற்கு ஆதரவாகவும் அல்கூருக்கு ஆதரவாகவும் இன்றும் செய்திகள் வெளியிட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**உலக தரிசனம்**

தேர்தலில் ஸ்திரமற்ற தன்மை தொடர்ந்து நீடிக்குமென்று அரசியல அவதனிகள் தெரிவிக்கின்றனர். (து)

**யுத்த நிறுத்தத்தை சாதகமாக்கி**

# பாகிஸ்தான் போர் தொடுத்தால் தகுந்த பதிலடி கிடைக்கும்

## காஷ்மீர் முதல்வர் தெரிவிப்பு

(ஸ்ரீநகர்)
றம்ழான் காலயுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி தீவிரவாதக் குழுக்களோ பாகிஸ்தானோ போர் தொடுக்குமானால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று காஷ்மீர் முதல்வர் பாருக் அப்துல்லா தெரிவித்தார்.

மத்திய அமைச்சர்களுடன் கலந்துரையாடி விட்டு பத்திரிகையாளர்களுக்கு தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜம்மு-காஷ்மீர் மக்களுக்கு அமைதி நிலையை தோற்றுவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மத்திய அரசு பாடுபடும் இவ்வேளையில் ஜம்முவின் ஆதரவு என்றும் தொடருமென காஷ்மீர் முதல்வர் தெரிவித்தார்.

யுத்த நிறுத்தத்தை மீறி போர் தொடுத்தால் மத்திய அரசுதகுந்தபதிலடி கொடுக்குமென்று மேலும் தெரிவித்தார். (து)

# சண்டிகர் விவசாயக் காட்சியில் நியூசிலாந்தின் பங்கெடுப்பு

(புதுடில்லி)
இந்தியாவின் சண்டிகர் நகர் விவசாயக் கண்காட்சியில் நியூசிலாந்தும் கலந்து கொள்ளுகிறது.

சண்டிகர் நகர் என்றும் காணாதவாறு இந்த வேளாண் கண்காட்சி அமைய இருப்பதாகவும் உலகிலே விலங்கு வேளாண்மைக்கு பேர்போன நியூசிலாந்து பெரும் எடுப்பில் இதில் பங்குபற்ற இருப்பதாகவும் அதற்காக அந்நாட்டு மூன்று புகழ்பெற்ற பாலுணவுக் கம்பனிகள் பங்குபற்ற இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நியூசிலாந்தில் விலங்கு வேளாண்மை விருத்தியில் நவீனத்துவம் எப்படி கைக்கொள்ளப்படுகின்றனஎன்பது பற்றியும்,

செயற்கை முறையினை பாலை நவீன முறையினை கையாண்டு புதுரக உற்பத்திகள் எப்படி நடைபெறுகின்றன என்பன கண்காட்சியில் இடம் பெற இருக்கின்றன. (து)

# குளிர்காய்ந்து கொண்டிருந்த மூவர் கோரமாக வெட்டிக் கொலை

## அஸாம் மாநிலத்தில் சம்பவம்

இரவு நேரத்தில் தீமூட்டிக் குளிர்காய்ந்து கொண்டிருந்த விவசாயிகள் மூவர் கோரமாக வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த நல்மட்டி என்ற இடத்தில் இடம் பெற்றுள்ளது.

விஷமிகள் கத்தியாலும் வாளாலும் கண்டபடி வெட்டிக் கொலைசெய்திருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

செய்தியறிந்து காவல்துறையினர் அங்கு விரைந்த பொழுது பள்ளிக்கூடம் ஒன்றில் அவர்களின் உடல்சின்னாபின்னமாகக் கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொலை செய்தவர்கள் யாரென்பது தெரியவில்லையென பொலிஸார் தெரிவிக்கும் இதேவேளை விஷமிகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் காவல்துறை முடுக்கி விடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (து)

**பயங்கரவாதத்தை**

# கட்டவிழ்த்து விடும் போக்கை பாகிஸ்தான் கைவிட வேண்டும்

## இந்திய உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)
ஜம்மு-காஷ்மீர் மீது எல்லை கடந்த பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிடும் போக்கை பாகிஸ்தான் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்திய மத்திய உள் துறை அமைச்சர் எல். கே. அத்வானி தெரிவித்தார்

நேற்று முன்தினம் நடந்த எல்லைப்புறப் பாதுகாப்புச் சம்பந்தமான அமைச்சர்கள் கூட்டத்தின்பின் பத்திரிகையாளர்களுக்கு மேற்கண்டவாறு அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; பாகிஸ்தானுக்கு முன்பும் இப்படியொரு சந்தர்ப்பம் வழங்கினோம் இப்பொழுது வழங்கப்பட்டிருக்கும் றம்ழான் யுத்த நிறுத்தத்தை பாகிஸ்தான் நன்குபயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

தீவிரவாதிகள் ஊடுருவுவதையும் அவர்களுக்கு போர்ப் பயிற்சி அளிப்பதையும் ஆயுதங்களைக் கொடுப்பதையும் பாகிஸ்தான் நிறுத்திக் கொள்ளவேண்டும் என்று அத்வானி கேட்டுக் கொண்டார். (து)

# சீன சுரங்க வெடி விபத்தில் 57 பேர் இறந்தனர்

(பீஜிங்)
சீனாவின மங்கோலியா கரையில் சுரங்கத்தில் காஸ் குழல் வெடித்தலில் ஐம்பத்தேழு பேர் இறந்துள்ளனர்.

காயிஸா நகர் சுரங்கத்தில் நடந்த இந்தவிபத்தில் காஸ்பைப் வெடிப்பினால் சுரங்கம் இடிந்துவிழுந்ததென்றும் ஒரே புகை மண்டலமாக சுரங்கத்துள் இருப்பதாகவும் 17 பேர்களின் உடல்களை மீட்கமுடிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சுரங்கவாசலில் ஒரே புகை மண்டலமாக இருப்பதாகவும் மீட்புப்பணி தாமதப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

# இந்தியாவிற்கு 25ஆண்டுகளுக்கு பின் ஈராக் துணைத் தலைவர்

(பக்தாத்)
ஈராக் துணைத் தலைவர் புதுடில்லி வந்துள்ளார்.

ஐந்துநாள்உத்தியோகபூர்வ விடயமாக இந்தியா வந்திருக்கும் ஈராக்கின் துணைத்தலைவர் தகாய் ஜாதன்பயனுள்ள பல பேச்சுக்களில் ஈடுபடவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுகிறது.

பொருளாதாரப் பரிவர்த்தனை நுண்ணியல்துறை மற்றும எண்ணெய்இறக்குமதி போன்ற விடயங்களில் இருதரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறார்கள்.

அண்மையில் இந்திய அமைச்சர் ஒருவரின் விஜயத்தைஅடுத்தேஈராக்கின்உப தலைவர் தகாய் இந்தியா வந்துள்ளார்.

கடந்தஇருபதைந்துஆண்டுகளுக்குப் பின் வரும்ஈராக்கிய முதல் தலைவர் இவராவார். (து)

# செலூலர் தொலைபேசியால் குழந்தைகளுக்கு மறதியாம் விஞ்ஞானிகள் எச்சரிக்கை

(லண்டன்)
செலூலர் தொலைபேசிகள் பாவிப்பதால் குழந்தைகளுக்கு மறதி ஏற்படுவதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பொஸ்ரே என்ற லண்டன் ஆங்கிலபத்திரிகையில் விஞ்ஞானிகள் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

அக்கட்டுரையில் மேலும் குறிப்பிடுகையில்; சிறுவர்கள் செலூலர் தொலைபேசியைப் பாவிப்பதனால் இரவில் நித்திரை கொள்வதில்லையென்றும் தெரிவிக்கிறது.

மேலும் அப்பத்திரிகையில்; பதினெட்டு வயதிற்குட்பட்டவர்கள் இந்த செலூலர் தொலை பேசிகளைப் பாவிக்கக்கூடாதென்றும் இந்த தொலை பேசியில் இருந்து எழும்கதிர்களால்பாதிப்புகள் ஏற்படுவதாகவும் ஆராய்ச்சி மூலம் கண்டறிந்துள்ளதாக விஞ்ஞானிகளின் கட்டுரைகள் தெரிவிக்கின்றன. (து)

# தேர்தல் முடிவின் பின் வழக்குத் தாக்கல்

(வாஷிங்டன்)
அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அல்கூர் வாக்குகள் எண்ணப்படும் முறைதொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளார்.

தேர்தல் முடிவுகள் தான் குறிப்பிட்ட படி எண்ணப்பட்டு அறிவிக்கப்படாது விட்டால் மத்திய உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப் போவதாக அல்கூர் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பான தீர்ப்பு வரும் வெள்ளிக்கிழமை வழங்கப்படுமென்றும் அதனைத் தொடர்ந்தே அடுத்த நடவடிக்கை எடுக்கப் போவதாக அல்கூர் அறிவித்தார். (து)

**பஞ்சாப்பில்**

# தொடர் குண்டு வெடிப்பு

## சிறுவன்பலி;20பேர்காயம்

(லாகூர்)
பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணத்தில் மூன்று குண்டுகள் வெடித்ததில் சிறுவன் பலியாகியதுடன் இருபதுபேர் காயமடைந்துள்ளனர்.

பஞ்சாப்மாகாணத்தின் தலைநகரான லாகூர் நகரில் சனநெரிசல் மிகுந்த பஸ் நிலையம் ஒன்றில் இரண்டு குண்டுகள் வெடித்தது இதில் மூன்று வயதுச் சிறுவன் கொல்லப்பட்டதுடன் இருபது பேர் காயமடைந்துள்ளனர். பல பஸ்கள் சேதத்திற்குள்ளாயின.

அடுத்த குண்டு லாகூருக்கு வடக்கே முப்பது மைல் தொலைவில் உள்ள சந்தையில் வெடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து அப்பகுதி ஒரே புகைமண்டலமாகக் காணப்படுவதாகவம் பதற்ற நிலை நீடிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தோர் உடன் ஆஸ்பத்திரிக்குளடுத்துச் செல்லப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

எனினும் பலர் கடும் காயங்களுக்குள்ளாகியதுடன் உயிருக்காகப்போராடிக் கொண்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

இச்சம்பவத்தின் சூத்திரதாரியை கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுவருகின்றனர். (க-து)

# ஆயுதத்தடை விற்பனை மீறலா?

(வாஷிங்டன்)
மரபு ரீதியான ஆயுதங்களை விற்பதை தடை செய்யும் ஒப்பந்தத்தை ரஷ்யா மீறியுள்ளது.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்த அமெரிக்கா அதிகாரிகள் மொஸ்கோ விற்குச் செல்ல இருக்கிறார்கள்.

இதேவேளை ரஷ்யா இராணுவத்திற்கு மிக் விமானங்களை வடிவமைக்க இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

"செரு வந்த போழ்தில் சிறை
செய்யா வேந்தன்
வெரு வந்து வெய்து கெடும்"
- குறள் -

வலம்புரி

## பிரபாவின் உரை

சர்வதேசமும் ஆவலுடன் எதிர் பார்த்திருந்த விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர் தின உரை வெளியாகி விட்டது. அவ்வுரை குறித்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள அரசியல் வாதிகள், இராஜ தந்திரிகள், ஆய்வாளர்கள் என பலதரப்பினரும் தமது கருத்துக்களை அபிப்பிராயங்களை வெளியிட்டும், வெளியிடவும் உள்ளனர்.

அவையெல்லாம் ஒரு புறமிருக்க பிரபாகரனின் உரையின் சாராம்சம், இரு பெரும் விடயங்களை தெளிவு படுத்தியுள்ளது. அவற்றில் ஒன்று நிபந்தனையற்ற சமாதானப் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் தயார், மற்றையது தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழக் கூடிய இயல்பு நிலையை அரசு ஏற்படுத்த வேண்டும். இவை இரண்டும் இலங்கை அரசினால்நிறைவேற்றப்படும் போதே சமாதானப் பேச்சு வார்த்தை கனதியுடையதாக, அமையும் என்பதே அவரது கருத்தாகும். ஒரு புறத்தில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப் படும் போதும், மறுபுறத்தில் பொருளாதாரத் தடையினால் தமிழ் மக்கள் சொல்லொனாத்துன்பங்களை அனுபவிக்கும் போதும் சமாதானப் பேச்சு வார்த்தை என்பது எந்தளவு தூரம் சாத்திய மாகும் என்ற அவரது கேள்வி !நியாயமானதே

தமிழர்களுக்கு உரிமை வழங்கும் பரிபூரண விருப்பு' அரசிடம் இருக்குமானால், அதனை நடைமுறைப்படுத்தும் உபாயம் சமாதானப் பேச்சுவார்த்தைதானெனில் அரசாங்கம் தமிழ் மண்ணில்

# விழிப்புலன் அற்றோரையும் அரவணைத்து
# நெறிப்படுத்த வேண்டியது நம் கடமையே

### இன்றைய உலகில் விழிப்புலன் அற்றவர்கள்ஒரு சராசரி மனிதனாகவாழ வேண்டியவர்கள்

இன்றைய நவீன உலகம் அவசரத்தை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இத்தகைய சூழல் தாக்கங்கள் தற்காலத்தில் அனைவருக்கும் பொருந்துதல் மிகவும் இன்றியமையாததொன்றாகின்றது. அறிவு, ஊக்கம், திறமை என்ற கருவிகளால் முன்னேறும் மனிதன், சமூகத்தை அடிக்கடி தன் ஊனக்கண் கொண்டு பார்த்துக் கொள்ளத் தவறுகின்றான்.

இன்றைய நவீன உலகில் விழிப்புலன் இழந்தவர்களின் பிரச்சினைகளை, உளநெருக்கங்களைக் கவனத்தில் கொள்ளும் போது, அவர்களுக்குரிய சராசரி அந்தஸ்து கேள்விக்குறியாகிய விடயமாகி விட்டது.

ஆரம்ப கால கட்டங்களிலிருந்து விழிப்புலனற்ற விடயம்பலரால்பல்வேறுகோணங்களில் நோக்கப்படுகின்றமை நாம் கண்டு கொண்டு வருகின்ற விடயங்களில் முக்கிய அம்சமாகும்.

பொதுவாக 20Cm க்கும் 200mக்கும் இடையில் மூக்குக் கண்ணாடியின் துணை கொண்டும் பார்க்க முடியாதவரே சட்டப்படி விழிப்புலன் இழந்தவராவர். இதை விட எமது சமூக மட்டங்களில் மேலும் பலவிழிப்புலன் இழந்தவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள்;-

1. எந்தத் தொழிலும் செய்யாது சம்பாதிக்க முடியாதவர்.
2. பாடசாலை கற்பித்தலில் கற்க முடியாதவர் என்போரைக் குறிப்பிடலாம்.

### பெற்றோரின் பொறுப்பு

விழிப்புலன் இழந்தவர்களின் முதல் ஆசிரியர், பெற்றோரே. இவர்கள் மூடக் கொள்கையிலிருந்து விடுபட்டு, இத்தகைய பிள்ளைகளின் அறிவொளியை வளர்ப்பதற்குரிய ஒழுங்குகளைச் செய்வது மிகவும் அவசியம். சமூக நடத்தைகளை- அவர்களோடு பகிர்ந்து-இவர்களையும் அச் சமூகத்தோடு ஒன்றி வாழ வழி சமைத்தல் வேண்டும். தீயசருத்துக்களை நோக்காது நல்ல கருத்துக்

வ. சசிகுமார்
(சுன்னாகம் நிருபர்

களை (Possitive) புகுத்தல், அவர்களதுஉளச் சமநிலைக்கு நல்லதுணையாக அமைகிறது. எனவேதான்பெற்றோர்அவர்களின் உணர்வுகள், மொழி, அசைவுகள் ஆகியவற்றின் முதல் ஆசிரியர்களாக ஈடுபட வேண்டியதாகின்றது.

### விழியிழப்புக் காரணிகள்

இன்று உலகில் விழிப்புலவலு விழப்பு 49% பிறப்பிற்கு முன்பான காரணிகளில் தங்கியுள்ளது இன்னும், கண்ணில் காயம் கீறல் ஏற்படல், நஞ்சூட்டப்படல் போன்றவற்றாலும், மூளை, விழித்திரை கபச்சுரப்பி போன்றவற்றில் ஏற்படும்கட்டிகளாலும் மைய நரம்புத் தொகுதியில் ஏற்படும் சிலநோய்களாலும் இவ்வலு விழப்பு ஏற்படுவதாக கூறப்படுகிறது. ஆயினும் இன்றுவரை பலரது விழியிழப்புக்கு காரணம் இதுவரை தெரியாமலும்உள்ளது

இத்தகைய விழிப்புல வலு விழப்பைக் குறைப்பதற்குப் பலரும் முன் மாதிரியாக நடந்து கொள்ளல் அவசியமாகின்றது.

அவற்றுள் முக்கியமாக;

★ பிறந்தவுடனேயே குழந்தையின் கண்ணை பரிசோதித்தல்
★ தொற்று நோய்களின் கட்டுப்பாடு.
★ ஜேர்மன் சின்னமுத்துக்கு எதிரான நிர்ப்பீடனம்.
★ கண்காயத்துக்கு உடன் சிகிச்சை என்பவற்றை உடனுக்குடன் செய்து உரிய பாதுகாப்பை ஏற்படுத்தல் மிக அவசியவிடயமாகும். இன்றைய மாணவர்கள் ஆய்வு கூடங்களில் கூட கண்கவசங்களை அணிந்துகொள்ளலாம்.

### குறைபாடுகள்

இன்று உலகில் பல பார்வைக்கு குறைபாடுகள் ஏற்படுகின்றன. குறும்பார்வை நீள்பார்வை, புள்ளிக் குவியமில் குறைபாடு, வெள்ளெழுத்து போன்ற குறைபாடுகளும் வெளிச்சத்திலிருந்து இருட்டுக்கும் இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கும் வரும் போது நீண்ட நேரம் வரை தடுமாறல், ஒளியைக் கண்டு பயப்படல் போன்றனவும் குறிப்பிடத்தக்க குறைபாடுகளே விழிப்புலனிழந்தோர் அசைதல், வாசித்தல் அறிவைப் பெறுதல் ஆகியவற்றில் இடர்களை எதிர் நோக்குகிறார்கள்.

பொதுவாக ஒரு காட்சியைக் கண்டு தூண்டல் ஏற்படலும், பின்னர் நரம்பு மாற்றங்களால் துலங்கலைப் பெறும் மனிதன் அவற்றில் குறை காணப்படாதுவாழவே ஆசைப்படுவான். தாயின் கருவிலிருந்து பிறந்த குழந்தை ஒளி உணர்வு உடையதாகவே இருக்கும். எட்டாம் (8) வாரத்தில் அது உலகை பேதரிசிக்கும். இத்தகைய சிறப்பும் பெருமதியும் வாய்ந்த விழிப்புலன மூலம் மனதிற்கு சாந்தியைக் கொடுக்கத்தக்க செயற்பாடுகளை கண்டு அவற்றை நெறிப்படுத்தி மற்றோருக்கும் வழிகாட்டுவோமாக. எனவே எமது கோரிக்கை எவ்வளவு முக்கியமோ, அதே போல் விழிப்புலனற்றவர்களையும் ஏற்று அவர்களையும் ஒரு சராசரி மனிதராக வாழவைக்க வேண்டியது அவசியமாகும்.

## க. பொ. த. . . .

**வர்த்தகம்**

| | |
|---|---|
| இ. கிறிஸ்ரினாமேனகா | ஏ,2பி |

**விஞ்ஞானம்**

| | |
|---|---|
| ம. இரஞ்சிததர்ஷினி | 2ஏ,பி |
| சி. சிவதி | 2ஏ,பி |

**யாழ். கன்னியர்மடம் ம வி**

**வணிகக் கல்வி**

| | |
|---|---|
| நே. சிந்துஜா | ஏ,2பி,சி |
| அ. இவோன்தமிழினி | 2பி,சி |

**கலைப்பிரிவு**

| | |
|---|---|
| ஒலிவியாசாந்தி | ஏ,2பி |
| ம. மரின்டிலோசியா | ஏ,பி,சி |
| ச. அன்ரநீற்றா | ஏ,பி,சி |

**யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலை**

**விஞ்ஞானப் பிரிவு**

| | |
|---|---|
| இ. பிருந்தை | 2ஏ,சி |

**வர்த்தகப் பிரிவு**

| | |
|---|---|
| ஜ. சாருமதி | 2ஏ,பி |

**கலைப் பிரிவு**

| | |
|---|---|
| பி. ஆரூரன் | ஏ,2சி,சி |

**யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

**கலை**

| | |
|---|---|
| எஸ். சுஜீகரன் | 2ஏ,பி |
| எம். சீமாட்டி | 3பி |
| கே. ஜனார்த்தனி | 3பி |
| பி. சிவசீலன் | 2பி,சி |

**வர்த்தகம்**

| | |
|---|---|
| என். கஜந்தினி | 2ஏ'பி |
| குருபாகரன் | 2ஏ,சி |

**கணிதம்**

| | |
|---|---|
| எஸ். யசோதரன் | 3ஏ |

**வேம்படி மகளிர் கல்லூரி**

**கலைப்பிரிவு**

| | |
|---|---|
| வி. தவராசினி | 3பி |
| ரி. கௌசிகா | 3பி |
| பி. ரூபினி | 2ஏ,பி |
| ரி. துஷாதினி | 2ஏ,பி |
| கே. நீகேதினி | ஏ,2பி |
| பொ. சிவரஞ்சன் | பி,2சி |
| அ. வாசுகன | 2ஏ,பி,சி |
| கு. நிரோசன் | ஏ,2பி,சி |
| பே. நளாயினி | ஏ,பி,2சி |
| சீ. இரஞ்சிதா | ஏ,பி,2சி |
| ஜே. திரேஸ்லதாங்கி | ஏ,பி,2சி |

வர்த்தகப்பிரிவு

# கடையில் திருட்டு
## சிறுவன் பன்னன்சேனையில்
### அல்வாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை அல்வாய் பகுதியில் கடை ஒன்றில் இடம் பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக16வயதுச் சிறுவன் ஒருவன் பன்னன் சேனை சிறுவர் சீர்திருத்த பாடசாலைக்கு அனுப்பப் பட்டான்.

முத்துலிங்கம் ஜெயரத்தினம் (அல்வாய்)என்ற பிரஸ்தாப சிறுவனே பன்னன் சேனைக்கு அனுப்பப்பட்டவனாவான்.

பருத்தித்துறை நீதிமன்றில் அண்மையில் இடம் பெற்ற வழக்கு விசாரணையின் தீர்ப்பை அடுத்தே மேற்படி உத்தரவு அமுல்படுத்தப்பட்டது.

(க)

## பேரீச்சம் பழம் விநியோகம்

(மட்டக்களப்பு)

சவுதி அரேபிய அரசு, வர்த்தக வாணிபக் கப்பற்துறை

முறைப்படுத்தும் உபாயம் சமாதானப் பேச்சுவார்த்தைதானெனில் அரசாங்கம் தமிழ் மண்ணில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்குப் பின்நிற்க வேண்டியதில்லை. அவ்வாறு இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கு அரசு தயங்குமானால் தமிழ்மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற கூடியஉரிமைகளை - சுதந்திரத்தை அவ்வரசிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. இதில் இருவேறு கருத்திற்கிடமில்லை.

அதேவேளை தமிழ் மக்களின்உரிமைப்போரை நசுக்குவதில் வெளிநாடுகள் கங்கணம்கட்டி அரசுக்கு ஆயுத உதவிகளை வழங்கி வருவது குறித்தும் பிரபாகரன் தமது உரையில் குறிப்பிடத்தவறவில்லை. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் பிரபாகரனின் மாவீரர் தின உரையை கருத்தில் கொண்டு இனியாவது வெளிநாடுகள் பொறுப்புடன் நடக் வேண்டுமென்பதும் முக்கியமானதொரு விடயமாகும்.

இ. பிருந்தை 2ஏ,சி

**வர்த்தகப் பிரிவு**

ஜ. சாருமதி 2ஏ,பி

**கலைப் பிரிவு**

அ. ஜெரின்அலெக்சியா ஏ,2பி
இ. றணிஸ்குமாரி ஏ,2பி
இ. ஸ்ரெலாகிறிஷாந்திஏ,2பி
அ. மேரிஜெனிற்றா ஏ,2பி
பெ. மியூரிசியாமினி 2ஏ,சி
ப. குயின்சி ஏ,பி,சி
அ. மேரிநிலாந்தினி ஏ,பி,சி
ஏ. யூனிஸ்பெலிசியா ஏ,பி,சி

## யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரி

**கலைப்பிரிவு**

ரி. ஜீவானந்தன் 2ஏ,பி
ரி. திலீப்குமார் ஏ,பி,சி
ரி. ரமன ஏ,பி,சி
எஸ். சண்முகதாசன் ஏ,2சி
எஸ். சிவரூபன் ஏ,2சி
ரி. சேந்தன் ஏ,2சி
எஸ். ரஞ்சித் ஏ,2சி
எஸ். நிஷாந்தன் ஏ,2சி
ஐ. மதன்குமார் ஏ,2சி
எஸ். கஜனன் ஏ,2சி
கே. ஜசிந்தன் ஏ,2சி
ரி. சரத்பாபு ஏ,பி,2சி

**வர்த்தகம்**

ஏ. றொனால்ட் 2ஏ,சி
கி. மதனாகரன் ஏ,பி,சி
பி. ரஜீவ் ஏ,2சி
கே. விக்கினேஸ்வரன் ஏ,பி,சி,எஸ்
பி. சுரேஷ்குமார் ஏ,2சி,எஸ்

**விஞ்ஞானம்**

என். அருண 2சி,எஸ்

**கணிதம்**

எஸ். திருச்செல்வம் 3சி
ரி. கௌசிகா 3பி
பி. ரூபினி 2ஏ,பி
ரி. துஷாதினி 2ஏ,பி
கே. நீகேதினி ஏ,2பி
ஆர்.பி. நிஷானி ஏ,2பி
கே. சுதர்சினி ஏ,2பி

**வர்த்தகப்பிரிவு**

வி. விஜிந்தினி 3ஏ
எஸ். அபிராமி 3பி
யி. அனுஷா 3பி
ரி. சுஜந்தினி 3பி
எஸ். காமினி 2ஏ,பி
ரி. தயானா 2ஏ,சி
யி. ஜெயகதிகா 2ஏ,சி

**விஞ்ஞானப்பிரிவு**

சி. சிவானுஜா 3ஏ
ரி. கஸ்தூரி 3பி
கே. சயந்தி 3பி

## புனிதபத்திரிசிரியர்கல்லூரி

**கலைப்பிரிவு**

எஸ். சன்ஜீவ்குமார் 2ஏ,பி
ஆர். எவரஸ்ட்சன்தீப் குரூஸ் 2ஏ,பி
ஏ.பி. ஜஸ்ரின் 3பி

**விஞ்ஞானப்பிரிவு**

எவ். ஜெனிஸ்ரன் 2ஏ,பி
பி. மாதவன் 2ஏ,பி

## யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரி

**விஞ்ஞானப்பிரிவு**

சு. சுரேஸ்குமார் பி,2சி
வே. விஜயகுமார் பி,2சி
ச. அபிராமி பி,3சி

**கணிதப் பிரிவு**

பா. செந்தூரன் ஏ,2சி
வி. மன்மதராஜ் ஏ.2சி
ந. ஜெயந்தன் பி,2சி
பே. நளாயினி ஏ,பி,2சி
சீ. இரஞ்சிதா ஏ,பி,2சி
ஜே. திரேஸ்லதாங்கிஏ,பி,2சி

**வர்த்தகப்பிரிவு**

சி. சிவறாபன் 3ஏ
அ. விமல்ராஜ் ஏ,பி,சி
த. கமலநாதன் 2ஏ,பி
சோ. ஜெனந்தினி 2ஏ.பி
நா. சுகந்தி 2ஏ,பி
சி. அர்ஜன் ஏ,பி,சி
சு. கிருபதயாபரன் ஏ,பி,சி
தி. சிறீகுமரன் ஏ,பி,சி
இ. பிரமியா ஏ,பி,சி
த. சங்கீதா ஏ,பி,சி
கு. சிவானந்தினி ஏ,பி,சி
செ. தர்ஜினி ஏ,பி,சி
ப. தர்சினி ஏ,பி,சி
நி. சண்முகராஜசர்மா ஏ.2எஸ்
சி. பவதாரணி 2பி,சி
யோ. பவதாரணி 3ஏ,பி
இ. தமிழரசன் 2ஏ,2பி
க. கஜீரன் 3ஏ,சி
நா. செல்வேந்திரா 2ஏ,2பி
சி. சிவாஜினி 2ஏ,2பி
இ. ஜெயகௌரி 2ஏ,பி,எஸ்
ச. அமுதினி 2ஏ.பி,சி
யோ. ஜலஜா ஏ,2பி,சி

**கலைப் பிரிவு**

ப. சுதர்சன 2ஏ,பி
தே. திருஞானகௌரி 2ஏ,சி
செ. ரம்மியா ஏ,பி,சி
இ. கோமதி ஏ,பி,சி
க. பிரதீபன் ஏ,பி,சி
இ. சித்திராவதி 3ஏ,சி
ம. ஜெயகாந்தன் 2ஏ,பி,சி
து. ஜெயக்குமார் 2ஏ,பி,சி
க. பபிதா ஏ,2பி,சி
த. தமிழ்ச்செல்வன் ஏ,பி,2சி
ச. துளசிகன் ஏ,2பி,எஸ்

(மட்டக்களப்பு)

சவுதி அரேபிய அரசு, வர்த்தக வாணிபகப்பற்துறை முஸ்லிம் கலாசார அலுவல்கள் அமைச்சினூடாக அனுப்பி வைத்த புனித ரம்ழான் மாதத்துக்குரிய பேரீச்சம் பழங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பள்ளிவாசலில் வைத்து பொது மக்களுக்கு வழங்கப்பட்டன.

(ச-60)

## புலவர் மணியின் நினைவுக் கூட்டம்

(மட்டக்களப்பு)

மறைந்த மூத்த தமிழறிஞரும் கல்விமானும் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் மாணவனுமான புலவர் மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்களின் நினைவாக இரங்கல் கூட்டமும் விஷேட பிரார்த்தனை வைபவம் ஒன்று நேற்று காத்தான்குடியில் நடைபெற்றது.

காத்தான்குடி நவஇலக்கிய மன்றம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக இலக்கிய மன்றத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ரி எல். ஜௌபர்கான் தெரிவித்துள்ளார்.

மன்றத்தின் தலைவர் கவிஞர்சாண்டிமுகிதீன் தலைமையில்இவ்வைபவம் நடைபெற்றது.

# பிரபாவின் மாவீரர்தின உரைக்கு சிங்களக்கட்சிகள் கண்டனம்

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்வேலுப்பிள்ளை பிரபாகரனின் 11வது மாவீரர்தின உரைக்கு சிங்கள பேரினவாதக்கட்சிகள் பலத்த கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்துள்ளன.

சிங்கள பேரினவாதக்கட்சிகளான சிஹல உறுமயவும், ஜே வி. பி. யும் பிரபாகரனின் மாவீரர் தின உரையை வெகுவாகக்கண்டித்துள்ளன.

பிரபாகரன் பேச்சுவார்த்தைக்கு நிபந்தனைகளை விதிக்காது போனாலும் புலிகளுடன் பேசக்கூடாது என்றும், வடக்குக் கிழக்கை புலிகளுக்கு தாரைவார்த்துக் கொடுக்கக் கூடாது என்றும் சிஹல உறுமயக் கட்சியின் செயலாளரும் எம்.பியுமான திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் வடக்குக்கிழக்கு தமிழரின் பூமியென்று பிரபாகரன் கூறியுள்ளார். அப்படிக்கூறுவதற்கு எந்தவிதமான அதிகாரமும் அவருக்கு இல்லை. வடக்குக்கிழக்கு பௌத்த சிங்கள பிரதேசமாகும். சமாதானப் பேச்சை நடாத்தி ஈழத்தை புலிகளிடம் வழங்க வேண்டாம் என்றும் அவர் கேட்டுள்ளார்.

வெளிநாட்டு மத்தியஸ்தத்துடன் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது என்று ஜே. வி. பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளதுடன் பிரபாகரன் நிபந்தனை விதிக்காது விட்டாலும், 'ஈழம்' தான் தீர்வு என்று கூறியிருக்கிறார். அப்படி ஈழம் அமையுமானால் தென்பகுதியில் இருக்கும் தமிழ்மக்கள் அனைவரும், வெளியேற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

பிரதமர், எதிர்க்கட்சித் தலைவருடன்

# இராஜாங்க அமைச்சின் செயலாளர் சந்திப்பு!

(கொழும்பு)
அமெரிக்க இராஜாங்க அமைச்சின்செயலாளர் கார்ல் இன்டர் பேர்த் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவையும் சபாநாயகர் அனுராபண்டாரநாயக்காவையும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச்சந்திப்பின் போது அனைத்துத் தரப்பினரும் சேர்ந்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்றும் இதற்காக அனைவரும் பாடுபடவேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சின் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (வ)

**பிரபாவின்.-**
விநாயகமூர்த்தி, ரெலோ அமைப்பின் தலைவரும், வன்னிமாவட்டஎம்.பியுமான செல்வம் அடைக்கலநாதன், மத்திய மாகாண தமிழ் கல்வி இந்து கலாச்சார சமூக சேவைகள் அமைச்சர் ராதாகிருஸ்ணன் ஆகியோரே பிரபாவின் உரையை வரவேற்று தனித்தனியாக அறிக்கைவிட்டுள்ளனர்.

இந்த அறிக்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சமாதானப் பேச்சுக்களுக்கு நிபந்தனை விதிக்காது விட்டமை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நல்ல சமிக்ஞை ஆகும்.

அரசு இனியும் காலம் தாழ்த்தாது மூன்றாம் தரப்புமத்தியஸ்தத்துடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். போர் நிறுத்தம் உடனடியாகக் கொண்டு வரப்பட்டு இயல்பு வாழ்க்கைக்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர், [வ]

**அநுராதபுர..**
பதவியா சிறிபுரத்தில் இருந்து அநுராதபுரம்சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் வண்டி ஒன்று தம்பன்னாவை அகலவத்த சந்தியில் சென்றுகொண்டிருந்தபோது கிளைமோர்கண்ணிவெடியில் சிக்கி பஸ் வண்டி வயல் வெளிக்குள் தூக்கி வீசப்பட்டு பலத்த சேதமடைந்தது. இச்சம்பவம் நேற்றுக்காலை 6 45 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் சிக்கிய பஸ்ஸில் 50 பேர் பிரயாணம் செய்திருந்தனர். இக்குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட 7 பேரில் ஒரு மாணவியும் அடங்குவர்.

காயம் அடைந்து அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள 40 பேரில் பலரின் நிலைகவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே.வேளை வடமத்திய மாகாண முதல் அமைச்சர் பேர்டி பிரேம்லால் திஸநாயக்கா காயமடைந்தவர்களுக்குத் தேவையானமருந்துகளை உடன் வழங்குமாறு சுகாதாரப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார்:

இந்த விபத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு 12 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பேரியல் அஷ்ரப் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (வ)

**ஆசிரியர்-.-.**
வும் ஆசிரிய பற்றாக்குறையை போக்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பதாகவும், அதற்கு போதியளவு விண்ணப்பம் கிடைக்காமையாலேயே வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாகவும், அதுவும் சரிவராது போனால் இந்தியாவில் இருந்து ஆசிரியர்களைத் தருவிக்க வேண்டிவரும் என்றும் தெரிவித்தார். (வ)

**அமெரிக்க---**
களின் அடிப்படையில் தான் அறிந்து கொண்டோம்.

வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர் உரையானது மூன்று விடயங்களில் தென்பையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது:

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு ஏற்படுத்துவதற்குஅமெரிக்கா பூரண ஆதரவு வழங்குமென்றும், இதனை உறுதிப்படுத்தவே இலங்கைக்கு விஜயம் செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டை சீர்குலைக்கும் எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் அமெரிக்கா ஒருபோதும் ஒத்துவராதென்றும், நாட்டு மக்கள் கௌரவத்தோடு வாழக் கூடிய ஒரு தீர்வையே அமெரிக்கா வரவேற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குக் காரணம் சிறுபான்மை மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படாமையே என்று ஜனாதிபதி சந்திரிகா கூறியதைஅமெரிக்கராஜாங்க வெளிவிவகார அமைச்சின் செயலர் கார்ல்இன்டர்பேர்த் நோர்வேயின் சமாதான முயற்சிக்கு இந்தியா பூரண ஆதரவுதெரிவிக்கும் என்றும், பிரதான கட்சிகள் அனைத்தும் ஒரு பொதுவான இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைதியான முறையில்தமது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ளமுயலவேண்டும் என்றும் கார்ல் இன்டர்பேர்த் தெரிவித்துள்ளார். (வ)

**பிரபாகரனின்--**
கூடிய நல்லதொரு விடயமாகும் இந்த விடயத்தில் அரசுதான் அடுத்தகட்டநடவடிக்கைகளை தொடர வேண்டும்.

இவ்வாறு இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு கொழும்பு வந்து சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை தொடர்பாக தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரம சிங்கா இது தொடர்பாக மேலும் கருத்து வெளியிடுகையில்;

இந்தியாவில் இருந்து இப்போதுதான் வந்துள்ளேன் பிரபாகரனின் மாவீரர் தின உரையை தான் முழுமையாகப் படிக்கவில்லை அந்த உரையை முழுமையாக படித்த பின்னர்தான் அது பற்றி மேலதிக கருத்து தெரிவிக்க முடியும் என்றும் கூறியுள்ளார். (வ)

**விடுதலைப்----**
20-11-2000ம் ஆண்டுவரை தமது தரப்பில் 13ஆயிரத்து 192 ஆண் மாவீரர்களும், மூவாயிரத்து 407 பெண் மாவீரர்களும் அடங்கலாக மொத்தம் 16 ஆயிரத்து 599 பேர் வீரச்சாவடைந்துள்ளதாக புலிகளின் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாவீரர்களில் கரும்புலிகளாகக் காவியம் படைத்து வீரச்சாவடைந்தவர்கள் 213 பேர். இவர்களில் 158 ஆண் கரும்புலிகளும் 55 பெண் கரும்புலிகளும் கடல், தரை ஆகியவற்றில் வீரச்சாவடைந்தவர்களாவர்.

அதேசமயம் விடுதலைப் போராட்ட காலத்தில் நடைபெற்ற முக்கியமான சமர்களில் வீரச்சாவடைந்த போராளிகள் பற்றிய விபரங்களும் அவ்வறிக்கையில் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் ஆகாய கடல்வெளிச் சமர் 604 பேர், மணலாறுச் சமர் 233 பேர், தவளைப்பாய்ச்சல் 460 பேர், கொக்குத்தொடுவாய்ச் சமர் 175 பேர், இடிமுழக்கம் 181 பேர், சூரியக்கதிர் 438 பேர், ஓயாத அலைகள் ஒன்று 315 பேர் இரண்டு 403 பேர்' மூன்று 1336 பேர், சத்ஜெய இரண்டு 100 பேர், மூன்று 133 பேர் பரந்தன் ஆனையிறவுச்சமர் 193 பேர், வவுணதீவு முகாம் சமர் 103 பேர், கிளிநொச்சி பரந்தன் ஊடுருவித் தாக்கியமை 300 ஜெயசிக்குறு2116 பேர் என்ற வகையில் புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

இதேவேளை எல்லைப் படையைச் சேர்ந்த 195 எல்லைப்படை வீரர்கள் வீரச்சாவடைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# திட்டமிடல் குழுகூட்டம் திருமலையில் நடைபெறும்

(வவுனியா)
வடக்குக்கிழக்கு மாகாண திட்டமிடல் குழுவின் கூட்டம் நாளை திருகோணமலையில் பிரதம செயலாளர் ஜி.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

வடக்குக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஏழு அரச அதிபர்கள், மாவட்ட திட்டமிடல் பிரதி பணிப்பாளர்கள் மற்றும் மாகாண அமைச்சின் செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்வார்கள். இந்த வருடத்தில் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மீளாய்வும் அடுத்த வருடத்திற்கான வேலைத்திட்டம் பற்றியும் இங்கு கலந்துரையாடப்படும் என சிரேஷ்ட உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளையில் வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் முதலாவது கூட்டம் எதிர்வரும் 5-ம்திகதிகொழும்பில் நடைபெறும். வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு அரச அதிபர்கள் மற்றும் மாவட்ட திட்டமிடல் பிரதி பணிப்பாளர்கள் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். (வ)

# ஆவரங்கால் இளைஞர் விடுதலைசெய்யப்பட்டார்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஆவரங்காலைச்சேர்ந்த இளைஞர் நேற்று முன் தினம் விடுதலை செய்யப்பட்டார்.

வெள்ளையன் இரத்தினசிங்கம் (சர்வோதய வீதி ஆவரங்கால் மேற்கு அச்சுவேலி) என்பவரே சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கு இணங்க விடுவிக்கப்பட்டவராவார். (க-12)

# அபிவிருத்திப் பொருளியல் நூல் வெளியீடு இன்று

(யாழ்ப்பாணம்)
யாழ்.பல்கலைக் கழக இளம் பொருளியலாளர் மன்றத்தின் அபிவிருத்திப் பொருளியல் சஞ்சிகை வெளியீடு இன்று பி.பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

மன்றத்தின் உப தலைவர் செல்வி எஸ்.விஜயகுமாரியின் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதமவிருந்தினராகவும், கலைப்பீடாதிபதி எஸ்.பாலச்சந்திரன் சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொள்வர்.

முதற் பிரதியை பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் பெற்றுக் கொள்ள,ஆய்வுரையை வி.பி. சிவநாதன் நிகழ்த்துவார்:

இந் நிகழ்ச்சிக்கான ஒழுங்கமைப்பை மேற்படி மன்றத்தின் இளம் பொருளாளர் சி. சிவநேசன் மேற்கொண்டுள்ளார். (இ)

# கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
தொழில் நுபட்வியலாளர்களின் வினைத்திறன் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு இலங்கை தொழில் நுட்பவியல் சேவையாளர் சங்கம் பரீட்சைத் திணைக்களத்தை கோரியுள்ளது. இது தொடர்பாக பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் அனைவரும் சங்கத்தின் தலைவர் வி.செ. சிவப்பிரகாசம் உள்ளூராட்சி அலுவலகம் யாழ்ப்பாணம் அவர்களையோ அல்லது செயலாளர் ஐ. சிவலோகநாதன், ஆஸ்பத்திரி வீதி கோப்பாய் அவர்களையோ தொடர்பு கொண்டு தங்கள் விபரங்களை சமர்ப்பிக்கும்படி கேட்கப் படுகின்றனர். (க)

**புலிகள்---**
மட்டக்களப்பு
ஆகியோரும் கடந்த 21ம் திகதி மன்னாரில் படையினருடன் ஏற்பட்ட மோதலில்,

- கப்டன் சரவணன் (பெருமாள் சூரியமூர்த்தி) அனுராதபுரம்
- எல்லைப்படைவீரர் லெப் கேதீஸ் (கனகலிங்கம் கேதீஸ்) யாழ் மாவட்டம்

ஆகியோரும் கடந்த 24ம் திகதி கல்வயல் பகுதியில் படையினருடன் ஏற்பட்ட மோதலில் விழுப்புண் அடைந்து 25ஆம் திகதி உயிரிழந்த

- 2ம் லெப். திருமலை அரசி அல்பான (சிதம்பரநாதன் நாகலட்சுமி) யாழ்ப்பாணம்

ஆகியோரும் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்: (ம)

**12,019 படை.-**
துள்ளார்.

எனினும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்த இறந்தமுப்படையினரின் கணக்கெடுப்பில் உயிரிழந்தஎல்லைப்படை வீரர்கள், விஷேட அதிரடிப் படையினர், காணாமல் போனபடையினர் ஆகியோரின் எண்ணிக்கை இடம்பெறவில்லையெனஇராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்;

இதே வேளை அவர்களின் உத்தியோக பூர்வ தகவலின்படி 1983 ஜனவரி முதல் இவ் வருடம் ஒக்ரோபர் மாதம் வரை இருபதாயிரத்து 98 விடுதலைப்புலிகள் பலியாகியுள்ளதாக பிரிகேடியர் சனத் கருண ரட்ன தெரிவித்துள்ளார். (ந)


## அறிவித்தல்

**கட்டடத் திணைக்களம் காரியாலயம் (மாகாணம்)**
**29.11.2000 ஆம் திகதியில் இருந்து,**

கடற்கரை வீதியில் அமைந்துள்ள காரியாலயத்தில் கடமைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகிறேன்.

இ- சிறீகாந்தா
பிரதம பொறியியலாளர்;
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),
(கி/1064) (யாழ்ப்பாணம்)


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.